மலர்-5 இதழ்-104 டிசம்பர் 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




## சிதம்பரம் நடராஜருக்கு உகந்த

# மார்கழி மாதம்

# சாப்பிடும்போது கடைபிடிக்க வேண்டியவை

- இனிப்பை முதலில் சாப்பிட வேண்டும்.
- உணவு, தண்ணீர் எதுவானாலும் ரசித்து, சுவைத்துச் சாப்பிட வேண்டும்.
- ஆறு சுவைகளையும் உணவில் முடிந்த வரை சேர்த்துக் கொள்ளவேண்டும்
- உணவை மென்று கூழாக்கி எச்சில் நன்றாகக் கலந்து சாப்பிடவேண்டும். (நொறுங்கத் தின்றால் நூறு வயது வரை வாழலாம். உமிழ்நீர், வெள்ளை அணுக்களுக்கு இணையாகப் பணியாற்றக் கூடிய உமிழ் நீர் கலந்த உணவு நன்கு செரிமானமாகும்)
- உண்ணும்போது உதட்டை மூடி வாயில் காற்று புகாமல் மென்று சாப்பிட வேண்டும். வாயைத் திறந்து சாப்பிடுவது உமிழ் நீர் சுரப்பதை தடுத்து செரிமானத்தை பாதிக்கும்.
- சாப்பிடும் போது சாப்பாட்டில் கவனத்தை வைக்க வேண்டும். நம் பார்வையும் கவனமும் வேறு எங்கும் இல்லாமல் உணவை உற்று நோக்கி சாப்பிடவேண்டும்.
- உணவை கையால் எடுத்து சாப்பிடவேண்டும். நம் கை உணவில் படுவது மிகவும் நல்லது.
- சாப்பிடும்முன் 30 நிமிடமும், சாப்பிடும் போதும், சாப்பிட்டபின் 30 நிமிட மும் தண்ணீர் குடிக்கக் கூடாது. (தேவைப்பட்டால், தொண்டையை நனைக்கும்படிசிறிதுகுடிக்கலாம். தண்ணீர் குடிப்பது செரிமானத்திற்காக உற்பத்தியாகும் அமிலத்தை நீர்த்து தீங்கை ஏற்படுத்தும்)
- சம்மணமிட்டு சாப்பிட வேண்டும். இது உடலில் பரவும் சக்தியை வயிற்றுப் பகுதியில் தடுத்து, தேக்கி செரி மானத்திற்கு உதவும். காலைத்தொங்கவிட்டு நாற்காலியில் அமர்ந்து உண்பது நல்லதல்ல.
- உணவு உண்ணும்போது மன உளைச்சல், சண்டை, கோபம் போன்ற உணர்ச்சிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.




# மிகப்பெரிதாக வளரும் சுயம்பு லிங்கம்

உலகத்தின் மிகப்பெரிய சுயம்பு லிங்கம் இவர்தான்.

18 அடி உயரம். 20 அடி சுற்றளவு கொண்ட இந்த லிங்கத்திருமேனி கொண்ட பெருமானை பூதேஷ்வர் நாத் என்று அழைக்கிறார்கள்.

சதீஸ்கர் மாநிலம் க்ரியாபாந்த் மாநிலம், மதுரா என்னும் கிராமத்தில் இப்பெருமான் எழுந்தருளியுள்ளார்.

ஆச்சரியமான ஒரு உண்மை என்னவென்றால்!! இப்பெருமானை வருடம் தோறும் கணக்கிடுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் இவர் 6 முதல் 8 இன்ச் வரை வளர்ந்துகொண்டே வருகிறார்.




# பீடைகள் விலக்கும் வாராஹி

வாராஹிக்கு மஞ்சள் காப்பு சாற்றி, அது 24 மணி நேரம் அப்படியே இருக்க வேண்டும். பின்னர் அர்ச்சகரால் அகற்ற பட்ட பிறகு அதை தனியாக வாங்கி வந்து அதை வீட்டில் பூஜை அறையில் வைக்க வேண்டும். பின்பு காலை மாலை அதை தண்ணீரில் சிறிதளவு கலந்து தெளிக்க சகல பீடைகளும் அகலும்.



வெளிநாட்டில் வாழ்பவர் எங்கள் பகுதியில் வாராஹி கோவில் (வாராஹி கோவில் இல்லை என்பவர்கள் மட்டும்) இல்லை என்பவர். வாராஹி படம் வைத்து அதற்கு மஞ்சள் காப்பு சாற்றி வழிபாடு செய்யலாம்

# அற்புத பதில்

லண்டனில் இருந்த போது ஒரு முறை குரு ஸ்ரீல பிரபுபதா ஒரு பத்திரிகையாளரால் கேள்வி கேட்கப் பட்டது.

பத்திரிக்கையாளர்: "நீங்கள் ஏன் எங்கள் நாட்டுக்கு வந்தீர்கள்? நமக்கு சொந்த கலாச்சாரம், சொந்த கடவுள், சொந்த நம்பிக்கை இருக்கு, நீங்க ஏன் வந்தீங்க?"

ஸ்ரீல பிரபுபதா: "உங்கள் நாடு இங்கிலாந்து பல தலைமுறைகளாக இந்தியாவை ஆண்டது, அப்போது நீங்கள் எங்கள் செல்வங்களை லண்டனுக்கு கொண்டு சென்றீர்கள், ஆனால் நீங்கள் எங்கள் மிகப்பெரிய செல்வங்களையும், எங்கள் ஆன்மீக கலாச்சாரத்தையும் கொண்டு செல்ல மறந்துவிட்டீர்கள். எங்க கிட்ட இருந்து நீ எடுக்க மறந்ததை நான் உங்களுக்கு இலவசமா கொடுக்க வந்திருக்கேன்."



# எளிமையான பரிகாரங்கள்

சில எளிய பரிகாரங்கள் செய்வதன் மூலம் அரிய பலன்களை பெறலாம். அதை பற்றி தெரிந்து கொள்வோம்.

- ஆலயங்களை சுத்தம் செய்து கோல மிட்டால் ஆண்டவனின் அருள் கிடைக்கும்.



- துளசி செடி நட்டாலோ அல்லது அதற்கு தண்ணீர் ஊற்றினால் பாவங்கள் விலகும்.
- மலர் செடிகள் நட்டு வைத்தால் மங்கலங்கள் பெருகும்.
- உழவார பணிகளை மேற்கொண்டால் பிறவி பயனை அடைய இயலும்.
- தொழு நோயாளிக்கு வயிராற விருந்து அளித்தால் கர்ம வினைகள் நீங்கும்.
- பசியோடு வருபவரை உபசரித்தால் மோசம் கிடைக்கும்.
- கோவில் திருப்பணிக்கு உதவி செய்தால் மேன்மை உண்டாகும்.
- சிவன் கோவிலில் கால பைரவரையும், விஷ்ணு கோவிலில் சக்கரத்தாழ்வாரையும் வழிபட்டால் செய்வினை தோஷம் நெருங்காது.
- தினசரி தியானம் செய்வதால் நிம்மதியும், ஞானமும் கிடைக்கும்.
- ஸ்ரீநரசிம்மரின் எந்த திருக்கோலத்தை தரிசித்தாலும் கடன் தொல்லைகள், திருஷ்டி, திருமணத்தடை விலகி நன்மை பெறலாம்.
- காக்கைக்கு காலையில் உணவளித்தால் பித்ருக்களால் நன்மை உண்டாகும்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# சக்குளத்துகாவு பகவதி அம்மன்

பரசுராமர் பூமி என்றும், கடவுளின் தேசம் என்றும் கொண்டாடப்படும் கேரளாவில் புகழ் பெற்ற கோவில்கள் எத்தனையோ உண்டு. சிவ பெருமானின் அம்சமாக கருதப்படும் ஆதிசங்கரர் முதல் சிரஞ்சீவியான பரசுராமர், தர்மசாஸ்தாவாக விளங்கும் ஐயப்பன் போன்ற அவதார புருஷர்கள் தோன்றிய புண்ணிய பூமியாகும். மலைகளும், பள்ளத்தாக்குகளும், ஆண்டு தோறும் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளும், அருவிகளும் நிறைந்ததாலேயே கடவுளின் தேசம் என்று கூறுவதுண்டு.

இதில் சக்குளத்துக்காவு பகவதி அம்மன் கோவில், சுமார் 3000 ஆயிரம் ஆண்டுகள் பழமையான, நாரத முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோவிலாகும். அன்னை சர்வேஸ்வரியும் அண்ண பூரணியும் தங்களை நாடி வரும் பக்தர்களுக்கு அருளை வாரி வழங்கும் கோவிலாகும். இது ஆலப்புழா மற்றும் பட்டனம் திட்டா மாவட்டங்களின் எல்லையில் உள்ள நீரேற்றுபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. பம்பை ஆறும் மணிமலை ஆறும் மாலை போல் சூழ்ந்து ஓட நடுவில் இக்கோவில் அமைந்துள்ளது.

கலியுகத்தின் கடவுளாக போற்றி வணங்கப்படும் சக்குளத்துக்காவு பகவதி அம்மனின் அருளைப் பெற வேண்டி, பெண்கள் அனைவரும் இருமுடி கட்டி விரதம் இருந்து இக்கோவிலுக்கு வருகின்றனர். இந்த அம்மனை வேண்டிக்கொண்டவர்கள், தங்களின் பிரச்சனை தீர்ந்து, நினைத்த காரியம் வெற்றி பெற்றவர்களும், நினைத்த காரியம் நிறைவேற வேண்டியும், ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை தினத்தன்று இக்கோவிலுக்கு வந்து பொங்கலிட்டு வழிபாடு நடத்துவார்கள். அதோடு பெண்களின் கால்களை கழுவி பாத பூஜை செய்யும் நாரி பூஜையும் நடைபெறும்.

அம்மன் குடியிருக்கும் இந்த சக்குளம் பகுதி ஒரு காலத்தில் பெரும் காடாக இருந்தது. ஒருநாள், வேடன் ஒருவன் தன் மனைவியுடன் காட்டிற்கு விறகு வெட்ட வந்த போது, ஒரு பாம்பு சீறி வந்தது. பயந்து போன வேடன், அதை தன் கோடரியால் வெட்ட முயன்ற போது, அது தப்பி ஓடியது. கொல்லாமல் விட்டதால், பாம்பு தன்னை பழிவாங்கி விடும் என பயந்த வேடன் அதைக் கொல்லும் முடிவுடன் விரட்டினான்.

ஒரு புற்றை நோக்கி ஓடிய பாம்பு, அதன் மீது ஏறி புற்றில் இருந்த துளைக்குள் செல்ல முயன்ற போது, வேடன் அதை வெட்டினான். ஆனால், பாம்பு வெட்டுப்படவே இல்லை. மாறாக சீறிக்கொண்டு படமெடுத்தது. சற்று நேரத்தில் புற்றிலிருந்து ஒரு தண்ணீர் ஊற்று கிளம்பியது. பாம்பு மறைந்து விட்டது.

இதைக் கண்டு நடுங்கிப் போன வேடனும், அவன் மனைவியும் செய்வதறியாது திகைத்த வேளையில், நாரதர் மாறு வேடத்தில் வந்தார். அவர், அந்த புற்றை வெட்டும்படி கூறினார். வேடனும் புற்றை வெட்டினான். அப்போது தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிவந்தது. பின்னர் பாலும், தேனுமாய் மாறி வந்தது. உள்ளே ஒரு அம்பிகை சிலை இருந்தது. அதை நாரதர் எடுத்து பிரதிட்டை செய்தார். அந்தச் சிலையை பயபக்தியுடன் வேடன் குடும்பத்தினர் வணங்கி வந்தனர். பிற்காலத்தில் பட்டமனை வீட்டுக் குடும்பத்தார் இங்கு கோயில் எழுப்பினர்.

கோயில் அருகில் இருந்த குளத்தில், புற்றில் இருந்த தண்ணீர் நிரம்பி சர்க்கரை போல இனித்தது. இந்த சர்க்கரைகுளமே “சக்குளம்” என பெயர் மாறியது.

ஆதிபராசக்தியான வனதுர்க்கையே, சக்குளத்தம் தாயாக அருள்பாலிக்கிறாள். 1981ல் எட்டு கைகள் கொண்ட தேவியை பிரதிஷ்டை செய்தனர்.

மேலும் சிவன், ஐயப்பன், விஷ்ணு, கணபதி, முருகன், யட்சி, நாகதேவதைகள்,







www.aanmeegamalar.com

வனதேவதைகள் சிலைகளும் பிரதிட்டை செய்யப்பட்டது.

மார்கழி முதல் தேதியில் இருந்து 12 வரை, ஆண்களும், பெண்களும் இக்கோயிலுக்காக நோன்பிருக்கின்றனர். நினைத்த காரியம் நடக்க இந்த நோன்பு அனுசரிக்கப்படும். ஐயப்பன் கோயிலுக்கு செல்வது போலவே பிரம்மச்சரியம் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட கடமைகளைச் சரிவர கடைபிடிக்க வேண் டும்.

இந்த சமயத்தில் பெண்கள் இருமுடி கட்டி கோயிலுக்கு வருகின்றனர். இவ்வகையில் இது "பெண்களின் சபரிமலை" என்றும் சிறப்பு பெறுகிறது. 11ம் நாள் கலச அபிஷேகமும், 12ம் நாள் காவடி நிகழ்ச்சியும் நடக்கிறது.

மார்கழி மாதம் முதல் வெள்ளிக்கிழமையில், பெண்களை சக்தி வடிவமாகப் பாவித்து, அவர்களின் பாதங்களைக் கழுவும் "நாரி பூஜை" என்ற நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

ஆயிரக்கணக்கில் பெண்கள் இதில் பங்கேற்கிறார்கள். இதைப் பார்க்கும்ஆண்கள், தங்கள் மனைவி, தாய், சகோதரிகளுக்குரிய மரியாதையைத் தர வேண்டும் என்ற மனநிலையை அடைவதாக நம்புகின்றனர். இத்தலத்து மண்ணுக்கு மகத்துவம் அதிகம். ஒவ்வொரு துகளையும் மாணிக் கம் போல் கருதுகின்றனர்.

கோயில்கள் கட்டுவதற்கும், வீடு, கட்டடம் கட்டுவதற்கும் இங்கிருந்து ஒரு கைப்பிடி மண்ணை அள்ளிக் கொண்டு போகிறார்கள். இதனால் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை.

கேரளாவிலுள்ள அம்மன் கோயில்களில் கார்த்திகை மாதத்தில் சொக்கப்பனை ஏற்றப்படும் கோயில் இது மட்டுமே.

கார்த்திகை மாதம் திருக் கார்த்திகையன்று பொங்கல் உற்சவம் நடக்கும். அன்று, ஏராளமான பெண்கள் பொங்கலிட்டு அம்மனை வணங்குகின்றனர். அன்று இரவில் சொக்கப்பனை ஏற்றப்படும். புரட்டாசி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் நாகராஜா, நாகயட்சிக்கு சிறப்பு பூசை நடக்கிறது. ராகுதோசம் உள்ளவர்கள் இந்த பூசையில் பங்கேற்கலாம்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், தீராத வியாதியை உடையவர்கள், மனநிலை சரியில்லாதவர்கள், தாங்க முடியாத துக்கத்தில் இருப்பவர்கள், வியாபாரத்தில் நஷ்டமடைந்தவர்கள், எப்போதும் பயந்து கொண்டே இருப்பவர்கள் இங்கு வந்து வணங்குகின்றனர்.

பிரார்த்தனை நிறைவேறியதும் அம்மனுக்கு நெய் தீபம் ஏற்றி, குங்கும அர்ச்சனை செய்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுகின்றனர்.

கேரள மாநிலம் திருவல்லாவை அடுத்து ஆலப்புழை, பத்தனம்திட்டை மாவட்டங்களின் எல்லையில் உள்ள நீரேற்றுபுரத்தில் அமைந்துள்ளது சக்குளத்துக்காவு பகவதி அம்மன் கோவில். 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாரத முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக கூறப்படும் இந்த ஆலயம் 'பெண்களின் சபரிமலை' என அழைக்கப்படுகிறது.

பம்பை ஆறும், மணிமலை ஆறும் மாலை போல் இருபுறமும் ஓட, இயற்கை வளம் சூழ்ந்த பிரதேசத்தின் நடுவில் இந்தக் கோவில் அமைந்திருக்கிறது. எட்டு கரங்களுடன் கருணை மழை பொழியும் அருள் முகத்துடன் எழிலாக அருள் பாலிக்கிறாள் தேவி.

## சிறப்பான உணவு பழக்கம்

- குளித்தபின் 45 நிமிடம் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டபின் 2.5 மணி நேரம் குளிக்கக் கூடாது
- அளவு சாப்பாட்டைத் தவிர்த்து பசிக்குச் சாப்பிடுங்கள். ஏப்பம் வந்தால் அத்துடன் நிறுத்தலாம். எப்படி சாப்பிடுவது என்று அறிந்து சாப்பிட்டால் உணவுக் கட்டுப்பாடின்றி எதையும் சாப்பிடலாம்.
- தண்ணீர் சுத்தமாக இருந்தால், தண்ணீரைக் கொதிக்க வைத்தோ, வடிகட்டியோ குடிக்கக் கூடாது. தண்ணீரை மண் பானையில் ஊற்றி வைத்துக் குடிக்கலாம்.
- பசி வந்து சாப்பிட வேண்டும், தாகம் வந்து தண்ணீர் அருந்த வேண்டும், சோர்வு வந்து ஓய்வு எடுக்க வேண்டும், தூக்கம் வந்து தூங்க வேண்டும்.
- தூங்கத் தயாராவதற்கு முன் மனதைப் பாதிக்கும் பேச்சு, அதிர்ந்த சிந்தனைகள், செயல்பாடுகள் போன்றவை இல்லாமல அமைதியான சூழ்நிலையில் இருந்து படுக்கைக்கு சென்றால் தூக்கம் நன்றாக வரும்.




எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com




# வேண்டுதலின் முழு பலனை பெற

# விளக்கேற்றும்போது விளம்பர வாசனை எண்ணெய்களை பயன்படுத்தாதீர்கள்

நாம் செய்யும் அனைத்து விஷயங்களிலும் ஒவ்வொரு சூட்சுமத்தை வைத்துள்ளனர் நமது முன்னோர். அதன்படி பூஜை செய்யும்போது ஏற்றப்படும் விளக்கு சம்பந்தமாகவும் விரிவாக கூறியுள்ளனர்.

இறைவனுக்கு ஏற்றும் விளக்குகளில் ஒருசில விளக்குகளை சூட்சும காரண காரணங்களுக்காக வடிவமைத்துள்ளனர்.

அகல் விளக்கு, குத்து விளக்கு, சட்ட விளக்கு, நாகாசு குத்துவிளக்கு, நந்தி அடுக்கு விளக்கு, பாவை விளக்கு, அஷ்டோத்திர விளக்கு, கிளை விளக்கு, கேரள விளக்கு, தொங்கு விளக்கு, தூண்டாமணி விளக்கு என்று பல வகை விளக்குகளை பயன்படுத்தியுள்ளனர்.

இதேப் போன்று அந்த விளக்குகளை ஏற்றப் பயன்படுத்தும் எண்ணைகளையும், அந்த எண்ணை பயன்படுத்தி விளக்கு ஏற்றுவதால் ஏற்படும் பயன்களையும் மிகத் தெளிவாக கூறியுள்ளனர்.

பசு நெய்யில் விளக்கு ஏற்றினால், ஏழ்மை, தீயசக்திகள் நீங்கி, நேர்மறை அதிர்வுகள், ஆரோக்கியம், செல்வம், நல்ல அதிர்ஷ்டம் மற்றும் வளமான வாழக்கை கிடைக்கும்.

சுத்தமான நல்லெண்ணெய் கொண்டு தீபம் ஏற்றினால் சகல தோஷங்களும், தீய ஆவிகளும் நீக்கப்பட்டு, நாள்பட்ட பிரச்சனைகள் மற்றும் ஏழரை சனியின் பாதிப்புகள் ஆகியவை குறையும்.

வேப்ப எண்ணெயில் தீபம் ஏற்றினால் குல தெய்வத்தின் ஆசிர்வாதம், வீட்டில் செல்வ வளங்கள் அதிகரிக்கும்.

விளக்கெண்ணெயில் தீபம் ஏற்றினால் குடும்பத்தில் மகிழ்ச்சி, வளர்ச்சி, ஆன்மீக முன்னேற்றம், உறவுகள், புகழ் மற்றும் செல்வ வளம் ஆகியவை பெறுகும்.

தேங்காய் எண்ணெயில் விளக்கேற்றுவதால் விநாயகரின் அருளை பெறலாம். குலதெய்வத்தின் அருள் பெற்று குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்

இலுப்பை எண்ணெயில் விளக்கேற்றினால், சிவ பெருமானின் அருள் கிடைக்கும், கடன் தொல்லை, உடல் நலக்கோளாறு போன்றவை நீங்கும்.

இதேப் போன்று பஞ்ச தீப எண்ணெய் விளக்கேற்றியுள்ளனர், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய் மற்றும் பசுநெய் ஆகியவை கலந்து பஞ்ச தீப எண்ணெயாகும்.

இந்த பஞ்ச தீப எண்ணெய்யில் விளக்கு ஏற்றினால் நம் வாழ்க்கையில் உள்ள துன்பங்கள், தீவினைகள், கடன் தொல்லைகள், திருஷ்டி, எதிர்மறை எண்ணங்கள், நோய்கள், ஏழ்மை ஆகிய அனைத்தும் நீங்கி, செல்வ வளம், அதிர்ஷ்டம், ஆரோக்கியம், மகிழ்ச்சி உண்டாகும்.

இந்த எண்ணெய்களை பயன்படுத்தி விளக்கேற்றி பலன்களை பெற விரும்புபவர்கள் அவசியம் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட எண்ணெய்கள் மனிதர்கள் பயன்படுத்த தக்கதாக இருக்கவேண்டும்.

தற்போது, விளக்கு ஏற்றுவதற்கென்றே தனித்தனியாக நெய், எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு பிரபலங்களை வைத்து நொடிக்கு நொடி விளக்கேற்றும் எண்ணெய் விளம்பரங்களை ஒளிபரப்பி வருகின்றன.

வியாபார போட்டியில் அந்த எண்ணெய்யில் பல்வேறு வாசனை திரவியங்கள் கலக்கப்பட்டு, விளக்கு எரியும்போது நறுமணம் வீசுவதாகவும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றது.

இதுபோன்ற எண்ணெய்களில் ஏற்றப்படும் தீபங்களால் முழுப் பலனும் கிடைக்காது.

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால்,

மனிதர்கள் உண்ணத்தக்க தரமான பசு நெய்யில் ஏற்றப்படும் விளக்கின் ஒளி,ஒரே சீராக வெள்ளை ஒளியாக, நறுமணத்தோடு இருக்கும். அந்த ஒளி வெள்ளத்தில், அந்த இடத்தில் உள்ள காற்று தூய்மையாகி, பிராண வாயு சுத்தமாக கிடைக்கும்.

இதுபோன்று உண்ணத்தக்க தரமான நல்லெண்ணெயில் விளக்கு எரியும் போது அதில் இருந்து வெளிவரும் எள்ளின் குணம் மாறிய வாசனை வீட்டில் உள்ள துர் சக்திகளை விரட்டும்.

இயற்கை மருத்துவத்திற்காக மனித உடலுக்கு உள்ளேயும், வெளியேயும் நேரிடையாக பயன்படுத்தப்படும், சுத்தமான தரமான விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய் போன்றவற்றால் விளக்கேற்றும்போது, பல்வேறு காரணங்களால் சேர்வடைந்து, மன நிலையில் ஏற்படும் தடுமாற்றம் விலகும். இதனால் தெளிவான முடிவு எடுக்க அந்த விளக்கிலிருந்து வெளிவரும் ஒருவித வாசம் துணை புரியும்.

இதுபோன்ற சுத்தமான மனித உடலுக்கு

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com




ஊறு விளைவிக்காத, உண்ணத்தக்க, மற்றும் இயற்கை மருத்துவத்துக்கும் மனிதர்களுடனும் தொடர்புடைய எண்ணெய்களில் முன்னோர் விளக்கேற்றி வழிபட்டனர்.

சாப்பிடுவதற்கும், இறைவனை வழிபடுவதற்கும் ஒரே விதமான எண்ணெய் வகைகளைத்தான் நம் முன்னோர் பயன்படுத்தினர்.

விளக்கு ஏற்றுவதற்கு ஒரு எண்ணெய், சமைப்பதற்கு ஒரு எண்ணைய் என்று நம் முன்னோர்கள் கடைபிடிக்கவில்லை.

மின்சாரப் பயன்பாடு இல்லாத காலத்தில் சுத்தமான நெய், சுத்தமான எண்ணெய்கள் மூலம் கோவில் முழுக்க விளக்கேற்றி ஒளியை உண்டாக்கினர். பரிசுத்தமான, மனிதர்கள் உண்ணப்பயன்படுத்திய எண்ணெயில் ஏற்றப்பட்ட விளக்குகள், கோவில் சிலைகளையும், சிற்பங்களையும் எந்த வித பாதிப்பும் ஏற்படுத்தாமல் பாதுகாத்தது.

ஆனால், தற்போது விளக்கு ஏற்றுவதற்கு பயன்படுத்தும் எண்ணெயில் அதிகளவு இரசாயனக் கலவை இருப்பதால், பல்வேறு கோவில்களில் விளக்கேற்றுவதற்கு தடைசெய்துள்ளனர். காரணம் அந்த இரசாயணக்கலவையிலிருந்து வெளிவரும் புகை கோவில்களில் உள்ள சிலைகள் மற்றும் அழகிய சிற்பங்களை சிதைப்பதாக ஆராய்ச்சியாளர்களால் நிருபிக்கப்பட்டதால், பல கோவில்களில் திறந்த வெளி இடத்தில் மட்டுமே விளக்கேற்ற அனுமதிக்கப்படுகின்றன. நன்மைகள் வேண்டி, வீட்டிலும், கோவிலிலும் விளக்கேற்றும்போது இதுபோன்ற கலப்பட எண்ணெயில் விளக்கேற்றினால் எப்படி வேண் டுதல்கள் நிறைவேறும்.


கீதா-ராஜன்

தலைவலி என்றால் தலைவலிக்குரிய மருந்தை எடுத்துக்கொண்டால் தலைவலி தீரும், அதற்கு பதில் ஜலதோஷத்திற்கு பயன்படுத்தும் மாத்திரையை பயன்படுத்தினால் தலைவலி தீருமா?

இதுபோன்றுதான் விளக்கேற்றி பலன் பெற நினைப்பவர்கள், கெமிக்கலில் விளக்கேற்றினால் எப்படி முழுபலன் கிடைக்கும். சுத்தமான நெய் மற்றும் சுத்தமான தரமான எண்ணெயில் விளக்கேற்றி வழிபட்டால் முழுபலனை பெறலாம்.

இனி வீட்டிலும் சரி... கோவிலிலும் சரி விளக்கேற்ற சுத்தமான தரமான உண்ணத்தக்க எண்ணெய்களையே பயன்படுத்துவோம், விளக்கேற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்ட போலியான தரம் கெட்ட எண்ணெய்களை தவிர்ப்போம்.

– தொகுப்பு கீதா ராஜன்

தொடர்பு எண்: 8825844033



# இராமகிருஷ்ணர் பொன்மொழிகள்



- செம்பொன்னிற்கும், பித்தளைக்குமுள்ள வேறுபாடு உரைகல்லில் உரைப்பதால் தெரியவரும். அதுபோல நல்லவரையும், அல்லாதவரையும் அவரவர்களுடைய பக்தியினால் அறிய முடியும்.
- ஒருவனுக்கு உண்மைப் பக்தி தோன்றி, அவன் சாதனைகள் செய்யவிரும்பினால் பகவான் நிச்சயமாக அவனுக்குத் தகுந்த குரு ஒருவனை ஏற்படுத்துவார். அதைப்பற்றிய கவலையே வேண்டியதில்லை.
- விவேகமும் வைராக்கியமும் இல்லாமல், வேதநூல்களைக் கற்பதால் எந்தப் பயனுமில்லை.
- உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே சாதனைகள் செய்து மனத்தை அடக்கி ஆள்பவனே உண்மை வீரன்.
- மனிதனுடைய மனம் தராசுக்கோல் போன்றது. இந்த மனத்தராசின் இரு தட்டுகளில் இரண்டு வித எடைகள் உள்ளன. உலகத்தின் மீதும், பட்டம், பெருமை இவற்றின் மீதும் உள்ள பற்று ஒன்று. மற்றொன்று அறிவு, பற்றின்மை, கடவுளிடம் அன்பு முதலியவை.
- வெட்கம், வெறுப்பு, அச்சம் இவை மூன்றும் நம்மிடம் உள்ள வரையில் நமக்கு ஈசுவர தரிசனம் கிடைக்காது.
- கடவுளை அடைவதற்குப் பாதைகள் பல உள்ளன. ஒவ்வொரு தரிசனமும் ஒரு மார்க்கமே ஆகும்.

ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share
செய்யுங்கள்

www.aanmeegamalar.com

# சுப்பையா சாமி முக்தி ஸ்தலம்




திருநெல்வேலி அருகில் உள்ள கடையனோடை என்னும் கிராமத்தில்வில்லிமுத்துக் கோனார் நாராயணவடிவு தம்பதியருக்கு 23.11.1908 ஆம் ஆண்டுபிறந்தவர் மகான் சுப்பையா சுவாமிகள்.

ஒரே ஆண் வாரிசான இவர், படிப்பில் அதிக ஆர்வம் கொண்டவராகவும், அதே நேரத்தில் ஆன்மீக நாட்டமுடையவராகவும் இருந்தார். அப்போது இருந்தே நண்பர்களுடன் சேர்ந்து பல கோயில்கள், சமாதிகளை சுற்றி வருவார். ஐந்தாம் வகுப்பு வரை கடையனோடையில் படித்த இவர், இப்படி கோயில், சமாதி என்று சுற்றி திரிந்ததால் அவரது பெற்றோர், மூத்த மகள் இருக்கும் குலசேகரபட்டினத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அங்குள்ள பெரிய பள்ளியில் சேர்ந்தார். ஆனால் அங்கு சுப்பையா சுவாமிக்கு நண்பர்கள் யாரும் கிடைக்கவில்லை. வார விடுமுறை நாட்களில் அருகில் உள்ள திருச்செந்தூர் சென்று அங்குள்ள வள்ளிக்குகை, மூவர் சமாதி போன்ற இடங்களில் தனிமையில் அமர்ந்து கொள்வார்.

அப்போது அங்கு வரும் சாதுக்களுடன் சித்த வைத்தியம், யோகம் போன்றவற்றை கற்றுக் கொண்டார். பின்னர் மூலிகை மருந்து தயாரித்து பலருக்கு சிகிச்சை செய்தார். 7ஆம் வகுப்பு வரை குலசேகரபட்டினத்தில் படித்த அவர், மீண்டும் கடையனோடைக்கு பெற்றோர்கள் அழைத்து சென்றனர். பள்ளி படிப்பை முடிந்த அவர் மதுரைக்கு சென்று பட்ட மேற்படிப்பு படித்து முடித்தார்.

கல்லூரி பேராசிரியராக இருந்த கல்யாணம் ராமசாமி என்பவருடன் தங்கி சித்துகளிலும், மருத்துவத்திலும், ஆராய்ச்சியிலும் பயிற்சி பெற்றார். மேலும் மூலிகை, வைத்தியம், உடற்கூறு, சித்துகள், உறங்காமை, உண்ணாமை போன்ற பயிற்சி பெற்றார். ஆனால் அதில் நாட்டமில்லை.

தன் நிலங்களை விற்று ஏழை அன்னதானம் வழங்கினார். பின்னர் கணபதி மூலமந்திரம், ஸ்ரீராம ஜெயம் போன்ற மந்திரங்களை பலருக்கு உபதேசித்தார்.

மீண்டும் குற்றாலம், வள்ளிக் குகை, திருச்செந்தூர் சென்றார். பின்னர் திருப்பதி சென்றார். பிறகு விருத்தாசலம் சென்றார். அங்கிருந்து வடலூரை அடைந்தார். அங்கு சில மாதங்கள் தங்கினார். பின்னர் அங்கிருந்து திருக்கழுக்குன்றம் வந்தடைந்தார்.

## சுப்பையா ஸ்வாமிகள் வசித்த குகை:

சுப்பையா சுவாமிகள் கடைசியாகப் பேசியது திருக்கழுக் குன்ற மலையிலமர்ந்த ஓராண்டு வரைதான்.

1951ஆம் ஆண்டு அங்கு வந்த சுப்பையா சுவாமிகள், அங்குள்ள மலையின் மீது அமர்ந்து யோக பயிற்சி செய்வார். அப்போது அவருக்கு பால், பழம் கொடுத்து உபசரித்தனர். இரவில் விஷ ஜந்துக்கள், புலி, சிறுத்தை எல்லாம் நடமாடும் இடத்தில் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டுள்ளனர்.

சுவாமி புன்முறுவலுடன் இரண்டொரு வார்த்தை கூறி அவர்களை அனுப்பி வைத்தார். பின்னர் மரணத்திற்கு மூலங்களை நசிக்கும் உபாயத்துடன் தவம் மேற்கொண்டதால் பேசுவதை நிறுத்திக் கொண்டார். தனக்கு முன்பாக திருவருட்பா என்ற நூலை மட்டும் எப்போதும் வைத்திருப்பார். பின்னர் அங்குள்ள மக்களால் கடையனோடை சுவாமி என்றும், பி.ஏ. சுவாமி என்றும், திருக்கழுக்குன்றம் சுவாமி என்றும் அழைக்கப்பட்டார்



வேலன்

வேதகிரீஸ்வரர் மலைமீது செல்ல அப்போது சாதாரண படிக்கட்டுக்களே இருந்தன. மேலும் இப்போது நாம் இறங்கும் வழியே அப் போது மலைக்கு ஏறும் இறங்கும் வழியாக இருந்தது. மேலே ஏறுவதற்கு வசதியாக 1952–ல் படிக்கட்டுக்கள்கட்டப்பட்டன. அப்போது செங்குத்து படிக்கட்டுக்கள் 200 கட்டி முடிக்கப்பட்ட பின்னர் வழியில் பெரிய பாறை குறிக்கிட்டது. நெட்டுக்குத்தாக கட்டப்பட்ட பாறையின் முடிவில் அது இருந்ததால் வெடிவைத்து தகர்க்கும் சமயம் அது அடிவாரம்வரை உருண்டுவரும். கட்டப்பட்ட படிக்கட்டுக்களும் சேதாரமாகும். அதுதான் இயல்பு. அதனை யாரும் எதிர்ப்பார்க்கவில்லை.

இருப்பினும் நமது ஊர் மக்களுக்கும் தேவஸ் தான அதிகாரி களுக்கும் ஓர்; நம்பிக்கை. மலை மீது குகையில் தங்கியுள்ள ஸ்ரீ சுப்பையா சுவாமி களிடம்கேட்டால் வழி கிடைக்கும் என நம்பினர். சுவாமிகளிடம் சென்று இந்த தகவலை தெரிவித்தனர்.சிறிது நேரம் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்த ஸ்ரீசுப்பையா சுவாமிகள் பிறகு கண்களை திறந்து பாறையின் எந்த இடத்தில் எத்தனை துளைகள் எவ்வளவு ஆழத்தில் போட்டு வெடி வைக்க வேண்டும் என்றும் மூன்று படிகள் மட்டுமே சிறிது உடையும் அந்த உடைந்த பாறையிலிருந்து 50 முதல் 60 படிக்கட்டுக்கள் வரை கட்டுமளவிற்கு படிக்கற்கள் கிடைக்கும் என்றும் பாறைகள் படிக்கட்டுக்கு வெளியில் தான் விழும் என்றும் தெரிவித்தாராம். அது அப்படியே நடந்தது. சிறிது உடைந்த படிக்கட்டுக்களையும் வெடிவைத்த அடையாளத்தினையும் இப்போதும் நீங்கள் மலை ஏறும் சமயம் காணலாம். வெடிவைத்த அடையாளம் சிகப்பு அம்புக்குறியிட்டில் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது...

சுப்பையா சுவாமிகள் கடையனோடையில் அவதாரம் செய்தது முதல் திருக்கழுக்குன்றத்தில் முக்தியடைந்தது வரை அவருக்கு இவ்வுலக உயிர்கள், சடமாயிருந்த கோயில்கள், சமாதிகள் முதலியவற்றுடன் நிறை யத் தொடர்புகள் உண்டு.

1961 ம் ஆண்டு அவர் தன்னுடன் தொடர்புடைய அன்பர்களிடம் தனது உடலில்நாடி அடங்கும் நேரத்தை குறிப்பிட்டு இருந்தார். அப்போது அவர் திருக்கழுக்குன்ற மலை குகையில் இருந்தார். நாடி அடங்கியவுடன் அவரது உடல் கீழே கொண்டுவரப்பட்டது. அவர் விருப்பப்படி சமாதி கட்டப்பட்டு அமர்ந்த நிலையில் வைக்கப்பட்டது. மேலெ திறக்கும் வகையில் பலகைக் கல் வைத்து மூடப்பட்டது. 40 நாட்களுக்கு பூஜை செய்யப் பட்டது. பின்னர் அரசு அதிகாரிகள் மருத்துவர்கள் முன்னிலையில் சமாதியின் மூடி திறக்கப் பட்டது.

அவரது உடல் கெடாமல் அமர்ந்த நிலையில் அப்படியே இருக்கக் கண்டனர் மக்கள் அனை வருக்கும் ஆச்சரியம். THE BODY IS INTACT என்று அரசுக்கு அறிக்கை அனுப்பப் பட்டது.சமாதியின் மேல் மூடி மூடப்பட்டது. மீண்டும் பத்து மாதங் களுக்கு பூசை செய்யப்பட்டது.அதன் பிறகு மீண்டும் சமாதியின் மூடி திறக்கப் பட்டது. உடல் கெடவில்லை. பின்னர் சமாதியின்மீது கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.







வெடி வைத்த அடையாளம் அம்புக்குறி காட்டப்படடுள்ள



சுப்பையா ஸ்வாமிகள் வசித்த குகை



www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# மரணத்திற்கு பின் கடைபிடிக்கும்
# சம்பிரதாயமும் விளக்கமும்

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து விஷயங்களுக்கும் பல்வேறு சாஸ்திர சம்பிரதாயங்களை இந்து மதத்தில் பின்பற்றப்படுகிறது.

இவ்வாறு பின்பற்றப்படும் சம்பிரதாயங்களுக்கும் காரண காரியங்கள் இல்லாமல் இல்லை.

ஒருசில காரண காரியங்களை தெரியாமலேயே முன்னோர் செய்த செயலை அப்படியே இன்றும் மக்கள் கடைபிடித்து வருகின்றனர்.

இந்த நடைமுறைகளை தெரிந்தவர்கள் தங்களது சந்ததிக்கு அதன் காரணத்தை எடுத்துரைக்க வேண்டும்.

இறுதி சடங்குகள் என்பது அனைத்து மதங்களிலும் நடத்தப்படும் ஒன்றாகும்.

ஆனால் மற்ற மதங்களுடன் ஒப்பிடுகையில் இந்து மதத்தில் அதிகளவு வித்தியாசமான இறுதி சடங்குகள் நடத்தப்படுகிறது.

ஆனால் இந்த ஒவ்வொரு சடங்கிற்கு பின்னரும் ஒரு காரணத்தை நம் முன்னோர்கள் வைத்துள்ளனர்.

இறந்தவர்கள் மரணத்திற்கு பிறகுஅமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அனைத்து இறுதிச் சடங்குகளும் நடத்தப்படுகிறது. ஆனால் பல இறுதி சடங்குகள் ஏன் செய்யப்படுகிறது என்பதே நமக்கு தெரியாது. இந்த வகையில் மரணத்தின் போது மக்கள் கடைபிடித்த விஷயங்களுக்கு எளிமையான விளக்கங்களை பார்ப்போம்.

### மூக்கில் பஞ்சு வைப்பது:

இறந்தவர்களின் உடல் என்பது பாக்டீரியாக்கள் அதிகம் வசிக்கும் இடமாக மாறிவிடும்.

எனவே அவர்களின் உடலில் இருந்து நுண்ணுயிர்கள் மூலம் சில வாயுக்கள் வெளிவரும்.

இதனால் சுற்றுசூழல் பாதிக்கப்படும். இதனை தடுக்கத்தான் நாடிகட்டு என்னும் பெயரில் காதையும், வாயையும் சேர்த்து கட்டுகிறார்கள்.

மேலும் மூக்கில் பஞ்சு வைக்கப்பட காரணமும் நுண்ணுயிர்கள் உடலில் பரவாமல் இருக்கத்தான்.

### விளக்கேற்றுவது:

இறந்தவர்கள் வீட்டில் கண்டிப்பாக விளக்கேற்றி வைக்க வேண்டும் என்பது முக்கியமான சடங்காகும். உயிர் சக்தியானது உடலை விட்டு பிரிந்து விட்டால் உடலானது வெற்றுடலாக மாறிவிடும். அவர்கள் உடலில் இருந்து வாயுக்கள் வெளியேற தொடங்கிவிடும். ஆன்மீகரீதியாக அவர்கள் உயிர் அலைகள் அந்த இடத்திலேயே சுற்றி வரும்.

இந்த அலைகள் மற்றவர்கள் உடலில் நுழைந்தால் அவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும். இதனை தடுக்கவே விளக்கேற்றி வைக்கப்படுகிறது. இந்த விளக்கு தெற்கு திசை நோக்கி ஏற்றிவைக்கப்பட வேண்டும், ஏனெனில் இதுதான் மரணத்தின் கடவுளான எமனுக்கான திசையாகும். விளக்கேற்றி வைத்தபின் எமதர்மரிடம் அந்த அலைகள் தன்னை நெருங்காமல் விளக்கின் தீபத்திற்கு செல்லும்படி வேண்டிகொள்ள வேண்டும்.

### ஒரு திரி:

ஒருவர் இறந்த பிறகு பஞ்ச பூதங்களால் நிறைந்த அவரின் உடலானது உயிரற்றதாகிவிடும். அதன்பின் ஒரே ஆன்மா மட்டுமே ஒளிரும். விளக்குகளில் பயன்படுத்தப்படும் ஒற்றை திரியானது ஒளிரும் ஆன்மாவை குறிக்கும்.

### பகலில் மட்டுமே இறுதி சடங்கு ஏன்?

அனைத்து இறுதி சடங்குகளும் பகல் நேரத்தில் மட்டுமே செய்ய வேண்டும், ஏனெனில் உடலை தகனம் செய்வது முதன்மையானதாகும். ஏனெனில் இரவு என்பது எதிர்மறை சக்திகள் அதிகம் உலவும் மேலும் அவற்றின் பலமும் இரவு நேரங்களில் அதிகம் இருக்கும். இறந்த எதிர் மறை சக்திகள் எப்பொழுதும் மற்ற உடல்களில் நுழைய முயலும்.

எதிர்மறை சக்திகளின் இந்த தாக்குதல்களை தவிர்க்கவே உடல் பகல் பொழுதில் தகனம் செய்யப்படுகிறது.

அறிவியல் ரீதியாக கூறும் போது இறந்தவர்களின் உடலில் இருந்து வெளிப்படும் நுண்ணுயிர்களின் அளவு அதிகமாக இருக்கும். இது சுற்றி இருப்பவர்களுக்கு எளிதில் தாக்கக் கூடும். அதனால்தான் உடல் தகனம் பகலில் செய்யப்படுகிறது.

### மூங்கில் பாடை:

மூங்கில்களில் குறிப்பிட்ட ஒலி ஆற்றலை வெளியிடும் தன்மை உள்ளது, இது சுற்றி வரும் தன்மையுடையது. இதில் இருந்து வெளிப்படும் ஒலி ஆற்றல் இறந்து உடலுக்கு கவசமாக அலைகளை ஏற்படுத்தக்கூடும். மூங்கிலால் செய்யப்பட்ட பாடையில் இருக்கும் போது அந்த உடல் ஒலி ஆற்றலால் எதிர்மறை சக்திகளிடம் இருந்து பாதுகாக்கப்படும்.

### கால்கள் சேர்த்து கட்டப்படுவது:

இறந்தவர்களின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்பு அவர்கள் உடல் தரையில் வைக்கப்பட்டு அந்த உடலின் காலின் பெருவிரல் இரண்டும் சேர்த்து கட்டப்படும். இது உடலின் வலது மற்றும் இடதுபுற ஆற்றல்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து உடலையே சுற்றி வர காலின் விரல்கள் கட்டப்படுகிறது.

### மண்பானை:

இறந்த உடலை சுற்றி இருக்கும் ஆற்றலை ஒருமுகப்படுத்த பல பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது, அதில் ஒன்றுதான் மண்பானை. மண்ணால் செய்யப்பட்ட பொருட்கள் இந்த வேலையை சிறப்பாக செய்கிறது.

உடலை எதிர்மறை சக்திகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க மண்பானை உதவுகிறது. மண்பானையிலிருந்து வெளிப்படும் ஒலி ஆற்றல்கள் மிகவும் வேகமாக பரவக் கூடியவை...



www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

### ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய சிறந்த மாதம் மார்கழி

ஜோதிட சாஸ்திர ரீதியாக ஆராய்ந்தால், மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சந்திரன் சஞ் சரிக்கும் காலத்தில் பௌர்ணமி தோன்றும் மாதத்தை ‘மார்க்கசிர’ என்று வடமொழியிலும் ‘மார்கழி’ என்று தமிழிலும் அழைக்கிறோம். இந்த மிருகசீரிஷ நட்சத்திரம் ம்ருகண்டு மகரிஷிக்கு உரியது. ஜோதிடப் பிதாமகராகத் திகழ்பவர் ம்ருகண்டு மகரிஷி. இவரது ‘ம்ருகண்டு சூத்ரம்’ மற்றும் ‘ம்ருகண்டு வாக்கியம்’ ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அந்நாளில் பஞ் சாங்கம் கணிக்கப்பட்டது. என்றும் சிரஞ்சீவியாக விளங்கும் மார்க்கண்டேயரின் தந்தை இந்த ம்ருகண்டு மகரிஷி என்பதும் மார்க்கண்டேயரின் ஜென்ம நட்சத்திரம் மிருகசீரிஷம் என்பதும் கவனிக்கப்பட வேண்டியவை.

சப்த சிரஞ்சீவிகள் என்றழைக்கப்படும் அஸ் வத்தாமர், மகாபலி, வியாஸர், ஹனுமான், க்ருபா சார்யர், பரசுராமர், விபீஷணர் ஆகிய ஏழு பேருக்கு அடுத்தபடியாக நேரடியாக சிரஞ்சீவிப் பட்டத்தைப் பெற்றவர் மார்க்கண்டேயர். தனது உயரிய பக்தியின் மூலமாக மரணத்தை வென்ற மகாயோகி அவர். மார்கழி மாதத்திற்கு உரிய நட்சத்திரமான மிருகசீரிஷத்தில் உதித்த அந்த இளம் ஞானி தனது 16வது வயதில் மரணம் நிச்சயம் என்பதை உணர்ந்தும் இவ்வுலக சுகங்களை நாடாமல் இறைவனை மட்டுமே சிந்தையில் கொண்டிருந்தார். தனது அபரிமித மான பக்தியினால் சிவலிங்கத்தைக் கட்டித் தழுவியிருந்த அவரைக் கொண்டு செல்ல நினைத்த எமதர்மனை சிவபெருமான் வதைத்த கதை நாம் அறிந்ததே. மார்க்கண்டேய சரித்திரம் மரணத்தை வெல்லும் மார்கழி என்று இந்த மாதத் தின் பெருமையை நமக்கு உணர்த்துகிறது. எனவேதான் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய மார்கழி மாதத்தை தேர்ந்தெடுப்பார்கள், விவரம் அறிந்தவர்கள்.

### பக்திக்கு முக்கியத்துவம் தரும் மாதம்

அரங்கநாதனையே மணாளனாக அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டாள் விரதமிருந்த மாதம் இது. அவரது உயரிய பக்தியின் காரணமாகத்தான் அவரால் ஆண்ட வன் அடிசேர முடிந்தது. அதே போன்று ராம நாம ஜபத்தினையே தனது உயிராகக்கொண்டிருக்கும் ஆஞ் சநேயர் பிறந்ததும் மார்கழி மாத அமாவாசை நாளில்.மார்கழி மாதத்தில் வரும் வளர் பிறை ஏகாதசித் திருநாளை வைகுண்ட ஏகாதசி எனக் கொண் டாடுகிறோம். இந்துக்கள் எல்லோருமே விரதம் இருக்கும் நாள் வைகுண்ட ஏகாதசி. விவரம் தெரியாதவர்கள் கூட வைகுண்ட ஏகாதசி நாள் அன்று விரதம் இருப்பதோடு உறங்காமல் கண் விழிக்கவும் செய்வார்கள். அந்த நன்னாளில் அதிகாலை வேளையில் ஆலயங்களில் சொர்க்க வாசல் திறக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் பெருமாளை சேவிப்பவர்கள் சொர்க்கத்தை அடைவர் என்பது சாஸ்திர நம்பிக்கையாகும்.

மார்கழி மாதத்தில் சூரிய பகவான் தனுசு ராசியில் சஞ்சரிப்பதால் இதை தனுர் மாதம் என்றும் அழைப்பார்கள். தனுசு ராசிக்கு அதிபதி குரு பகவான். அதாவது, குரு பகவான் வீட்டில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் இது. நவகிரகங்களில் அரசன் ஆகிய சூரியன், குருகுலவாசம் செய்யும் நேரம் என்பதால் அந்நாளில் அரசர்கள் உட்பட சத்திரியர்கள் யாரும் போர்த் தொழிலில் ஈடுபட மாட்டார்கள். பொதுமக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டிய காலமாக மார்கழியைக் கொண்டிருந்தார்கள் நம் முன்னோர்கள். ‘மாதங்களில் நான் மார்கழி’ என்று கீதையில் கண்ணன் சொன்னது பக்தி மார்க்கத்தால் என்னை அடைய முடியும் என்பதை சுட்டிக்காட்டவே.

### சுபநிகழ்வு நடக்காததன் காரணம்

நமது சொந்தக் காரியங்களை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்த ஒரு மாதமா வது இறைவனின் மேல் நமது முழு சிந்தனை யையும் செலுத்த வேண்டும் என்ற காரணத் தினால்தான் மார்கழியில் திருமணம் முதலான சுபநிகழ்ச்சிகளைத் தவிர்த்தார்கள் நம் முன்னோர்கள். பக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டும் மாதமாக மார்கழியைக் கருதினார்கள். வீடுபேறு எனும் மோட்சத்தினை அடைய உதவும் மாதம் இது. பீடு என்றால் பெருமை மிகுந்த அல்லது உயரிய என்று பொருள். பீடு உடைய மாதமாகிய இதனை பொருள் மாற்றி பலர் திரித்து இந்த புனிதமான மாதத்தினை பீடை மாதமாக மாற்றிவிட்டனர். தேவர்களுடன், மக்களும் இறை சிந்தனையில் ஈடுபடும்போது சுபநிகழ்சி என்னும் மகிழ்ச்சியால் பக்திக்கு இடர் ஏற்படக் கூடாது என்ற பெரியோரிகளின் உயர்ந்த நோக்கமே மார்கழியில் எந்த சுபநிகழ்ச்சிகளும் நடைபெறாததற்கு உண்மையான காரணமாகும்.



இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை பார்க்கவும்



# மனிதனின் நிரந்தரத் தேடல்

96 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

முதல் ஸெல்ஃப்ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஆலயம், என்ஸினிடஸ், கலிஃபோர்னியா, 1941 பிப்ரவரி 16ல் குருதேவர் ஆற்றிய சொற் பொழிவு.

அன்பு குருதேவர் அருளுகிறார்: " வெளியே உள்ள மலர்கள் (என்ஸினிடஸ்ல் உள்ள முதல் ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் தங்கத் தாமரை ஆலயத்தை வண்ணமிரு தோட்டங்கள் சூழ்ந்திருந்தன) மிக அழகாக உள்ளன. ஆனால் அவைகளுக் குப் பின்னால் இன்னும் அதிக எழில் வாய்ந்த ஒரு தோட்டம் உள்ளது. அது மிகவும் சூட்சுமமானதாகவும் கண்டறிவதற்கு துவக்கத்தில் கடினமானதாகவும் இருந்தாலும், ஆன்மீகக் கண்ணின் கதவு வழியாக அப்பிர தேசத்திற்குள் நீங்கள் ஊடுருவ முடியுமானால் அதைக் கண்டுபிடிப்பீர்கள். நான் அந்தத் தோட்டத்தில் ஈடு இணையற்ற குணங்களும் எந்த மலரையும் விட அதிக இனிமையும் நறுமணமும் விட மென்மையான எண்ணங் களாலான. ஒரு பிரதேசத்தில் வாழ்கிறேன். அங்கே என் மனமாகிய தேனீ, இறைவனின் சான்னித்தியமாகிய தேனை இடையறாமல் பருகிக்கொண்டிருக்கிறது."

"நமது மன ஒருமையை உள் முகப்படுத்தி நமக்குள் உள்ள அந்தக் கண்ணுக்குப்புலப்படாத பிரதேசத்தில் மேன்மேலும் நாம் வாழும்போது, நமது ஆன்மப் பண்புகள் விசேஷமான உருவங்கள் எடுப்பதை நாம் காண்கிறோம்,, ஒவ்வொரு உருவாக்கமும் ஒரு ஜன்னலாகும். இதன் வழியாக நாம் இறைவனின் வர்ணிக்க இயலாத இனிமையை கண்டுணர்கின்றோம். இறைவனைத் தேடுதல் என்பது தியானத்தை மட்டுமே கொண்டுள்ளது என எண்ணவேண்டாம். உங்களது அக அறிந்துணரும் சக்தி தேவையான அளவு ஆழ்ந்திருந்தால், எண்ணத்திலும் செயலிலும் நீங்கள் வெளிப்படுத்தும் ஒவ்வொரு நற்பண்பும், இறைவனின் இருப்பெனும் மறைந்துள்ள அமுதத்தை அளிக்கிறது."

அவர் மேலும் அருளுகிறார்: " ஆன்மீகக் கண்ணின் கதவு வழியாக நாம் கடந்து செல்லும்போது, முழு பிரபஞ்சத்தையும் உருவாக்கியுள்ள அறிவாற்றலுடைய பெரும் ஜீவ சக்தியின் தொழிற்சாலையை நமக்குள்ளேயே நாம் காண்கிறோம். நாம் அகத்தே ஒருமுகப் படுவதில்லையாதலால், இயற்கையில் உள்ள கண்ணுக்குப் புலப்படாத பரம் பொருளின் அடையாளங்கள் நம்மை திகைக்க வைக்கின்றன. இறைவனின் தயாரிப்புகளை நாம் காண்கிறோம்; அவனுடைய திருநாம் மலரிலும் ஆகாயத்திலும், எல்லாவற்றிலும் எழுதப்பட்டிருகிறது. ஆனால் அவன் மௌனமாக உள்ளான். மனிதர்கள் என்ற முறையில் நாம் அதிக சிறப்புரிமை அளிக்கப் பட்டிருக்கிறோம். ஏனெனில் இறைவனின் அனைத்து உயிரினங்களிலும், மனிதன் மட்டுமே அவனை நாடுவதற்கான, அவனைக் காணுவதற்கான, அவனை அறிவதற்கான மற்றும் அவனது மௌன மொழியைப் புரிந்து கொள்வதற்கான தேக மன மற்றும் ஆன்மீக ஆற்றலைப் பெற்றிருக்கிறான்."


www.aanmeegamalar.com

எது வெற்றிகரமான வாழ்க்கை?

ஒரு குழந்தை அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களையும், அத்துடன் அனேகமாக சவாரி செய்வதற்கான ஒரு பொம்மைக் காரையும் பெற்றிருப்பதையே வெற்றி என நினைக்கிறது. ஓர் ஏழைக் குழந்தை தனக்கு மட்டும் நிறைய விளையாட்டுப்பொருட்கள் இருந்தால், தனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என நினைக்கிறது. மாறாக ஒரு பணக்காரக் குழந்தை தன்னுடைய விளையாட்டுப் பொருட்களுடன் சலிப்படைய நேரலாம்; அது தனது ஆன்மாவில் ஓர் அமைதியற்ற நிலையைக் கொண்டுள்ளது. பணக்காரக் குழந்தையை காலப்போக்கில் மகிழ்விப்பது மிகக் கடினமாக ஆகலாம். ஏனெனில் ஏற்கனவே அது வெகு அதிக உடைமைகளைப் பெற்றிருக்கிறது. நமக்கு வயதாகும் பொழுது நம் குழநைதப்பருவ ஆசைகளை நினைத்துக் சிரிக்கின்றோம்; நமது வாழ்க்கையின்; கனவை நனவாக்கும் என நினைத்து நாம் இப்பொ ழுது எதையெல்லாம் விரும்புகிறோமோ அவை ஒரு நாள் நமக்கு முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும் என்பதை யார் அறிவார்? இது இப்படித்தான் என்பதை நான் கண்டேன். உணர்ச்சிகளின் போதையில் ஆழ்ந்து மற்றவர்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் முட்டாள்தனமான காரியங்களில் முன் யோசனையின்றி ஈடுபட நான் விரும்பவில்லை. மேலும் நான் அதற்கப் பால் நோக்கினேன். நாம் பார்வையை சற்று முன்னோக்கிச் செலுத்தினால், நமக்கு வேண்டும் என நாம் நினைக்கின்ற அநேகப் பொருட்கள் நமக்கு உண்மையிலேயே, மகிழ்ச்சியைத் தரப்போவதில்லை என்பதை நமக்கு நாமே காணமுடியும்."

"வாழ்க்கையின் அடிப்படைத் தேவை களான உணவு , உடை, உறைவிடம் மற்றும் உடல் நலம் ஆகியவற்றைப் பெற்றிருப்பதற்கு வெற்றி அவசியமாகும். நீங்கள் இவற்றைக் குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பெற்றிருக்க வில்லையெனில், நீங்கள் பரிதாபகரமான நிலையில் உள்ளீர்கள். நீங்கள் தேடுகின்ற குறைந்த அளவு வசதியையும் மகிழ்ச்சியையும் நீங்கள் அடைய வல்லவராக இருக்க வேண்டும். ஒருவர் ஆன்மீக லட்சியவாதியாகவோ அல்லது லோகாயத லட்சியவாதியாகவோ இருந்தாலும் சரி, மனிதன் அவனது தேக ஆலயத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு சில அடிப்படை தேகத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை எல்லா மனிதர்களும் ஒப்புக்கொள்ள முடியும். அவன் இந்த ஆலயத்தைப் பராமரிக் காவிட்டால், வேறு எதிலும் அவன் வெற்றிபெற முடியாது", என்கிறார் குருதேவர்.

மேலே கூறியுள்ளவாறுதான் மனிதர்கள் வாழவேண்டும் என்பதை குருதேவர் உணர்த்து கிறார். ஆனால் 'நாங்கள் அப்படி வாழமாட்டோம்' என்று கூறுகின்ற வகையில் உள்ளனர் மனி தர்கள். மகாபாரத்தில் விதுரர் திருத்ராஷ்டிரருக்குக்


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

கூறியுள்ள ஓர் உதாரணத்தை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

விதுரர் கூறுகிறார்: "மன்னரே! வாழ்க்கையின் தன்மையை விளக்க அறிஞர்கள் ஓர் உவமைக்கதைகயைக் கூறுகிறார்கள். அதை உமக்குச் சொல்கிறேன். ஒரு பெரும் காடு. அதில் உள்ளே நுழைவதற்கே கடினமான ஒரு பகுதி. அந்தப் பெரும் காட்டில் இருக்கும் கற்றறிந்த பிராமணன் ஒருவன், நுழைய முடியாத அந்தப்பகுதியில் நுழைந்தான், சிங்கம், புலி போன்ற பல கொடிய மிருகங்களால் நான்கு புறமும் சூழப்பட்டவனாக அவன் நின்றான். அந்த மிருகங்களின் பேரோசை அவனை அச்சுறுத்தியது. தாங்க முடியாத பயத்தினால் பீடிக்கப்பட்டு, அவன் நான்கு திசைகளிலும் அவன் ஓடினான். ஆனால் அந்த மிருகங்களிடமிருந்தோ அவை எழுப்பிய பயங்கரமான பேரோசையிலிருந்தோ அவனால் தப்பிக்க முடியவில்லை. அப்பொழுது ஒரு பயங்கரமான பெண், இரு கைகளையும் விரித்துக்கொண்டு அங்கே நிற்பதையும் கண்டான். பார்த்தாலே அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய ஐந்து தலை நாகங்களும் அங்கே மிகுந்திருந்தன. இவற்றின் நடுவில் புற்களாலும், புதர்களாலும், கொடிகளாலும் மூடப்பட்டுக் கிடந்த ஒரு பள்ளம் இருந்தது. அலைந்து திரிந்த அந்தக் கற்றறிந்த பிராமணன் பள்ளத்தில் விழுந்தான். அங்கே ஊசலாடிக்கொண்டிருந்த புதர்கள், செடி, கொடிகள் ஆகியவற்றில் சிக்கியதன் காரணமாக, அவன் கீழே விழுந்துவிடாமல் அந்தரத்தில் தொங்கினான். தலை கீழாகவும் கால் மேலாகவும் அவன் அப்படித் தொங்கிக் கொண்டிருந்தபோது, அங்கே ஒரு பெரிய பாம்பையும் கண்டான். அதைத் தவிர, ஆறு முகங்களும் பன்னிரண்டு கால்களும் கொண்ட பயங்கரமான ஒரு யானை யும் பள்ளத்தின் அருகே வந்து நின்றுகொண்டது. இந்த நிலையில் சிக்கிக்கொண்ட மனிதன் அங்கே ஒரு தேன்கூடு இருப்பதையும் அந்தக் தேன்கூட்டைச் சுற்றி தேனீக்கள் மொய்ப்பதையும், அந்தத் தேன் கூட்டிலிருந்து தேன் சொட்டிக் கொண்டிருப்பதையும் கண்டான். இதைப்பார்த்து ஆவல் தாங்கமுடியாதவனாகி அந்தத் தேனை அவனும் பருக அரம்பித்தான். எவ்வளவு பருகியும் திருப்தி அடையாமல், மேலும் மேலும் அவன் அந்தத் தேனை அருந்திக்கொண்டேயிருந்தான். பலவிதமான ஆபத்துக்களால் சூழப்பபட்டு இருந்தும் கூட அவன் வாழ்க்கையில் வெறுப்புற்றுவிடவில்லை. மேலும் வாழவே விரும்பினான். அந்தப் புதர்களினாலும் செடி கொடிகளினாலும் கீழே விழுந்துவிடாமல் அவன் தொங்கிக்கொண்டிருந்தானோ, அவற்றின் வேர்களைக் கூட எலிகள் கடித்துக் குதறிக்கொண்டிருந்தன. கொடிய மிருகங்கள் ஒருபுறம் சூழ்ந்திருந்தன. மற்றொரு புறம் பயங்கரமான பெண்மணி இரு கைகளையும் நீட்டி அவனை விழுங்கி விடத்தயாராக இருந்தாள். பள்ளத்தின் அடியில் பாம்பு நெளிந்தது. பள்ளத்திற்கு மேலே பயங்கரமான யானை நின்றிருந்தது. எலிகள் கடித்துக் கொண்டிருந்ததால் எந்த நேரமும் அவன் தொங்கிக்கொண்டிருந்த கொடிகள் அறுந்து விழலாம் என்ற நிலையும் இருந்தது. இதைத்தவிர, எந்தத் தேன் கூட்டிலிருந்து சொட்டுகின்ற தேனைப் பருகிக்கொண்டிருந்தானோ, அந்தத் தேன் கூட்டிற்குரிய தேனீக்களும் அங்கு வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அந்தச் சூழ்நிலையிலும்கூட அவன் வாழ்க்கையில் விருப்பை விட்டுவிடவில்லை. வாழ்வோம் என்றே நம்பினான்."

இந்த உவமைக் கதையைக் கூறியவிதுரர், அதில் அடங்கியிருந்த உண்மையை விளக்கிச் சில விவரங்களை எடுத்துரைத்தார். பெரும்காடு என்பது இந்த பூவுலகம். அதில் நுழைய முடியாத பகுதி என்று கூறப்பட்டது ஒரு மனிதனுடைய வாழ்க்கைக் காலம். கொடிய மிருகங்கள் என்பது மனிதனைப் பீடிக்கச் செய்கின்ற வியாதிகள். பயங்கரமான உருவம் படைத்தவளாக நின்று கொண்டிருந்த பெண்மணி என்பது ஒரு மனிதனின் அழகையும் இளமையையும் குலைக்கும் வயோதிகம். அந்த மனிதன் வீழ்ந்த பள்ளம் மனித உடல், அதன் கீழே நெளிந்துகொண்டிருந்த பாம்பு காலன். பள்ளத்தில் அந்த மனிதன் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த செடி, கொடிகள் எல்லா உயிர்களுக்கும் உயிர்மேலிருக்கும் ஆசை. பள்ளத்திற்கு வெளியே காத்து நின்ற பயங்கரமான யானைமனித ஆயுளில் ஒரு வருடத்தைக் குறிக்கிறது. அதனுடைய ஆறு முகங்கள் ஆறு பருவங்களையும், அதனுடைய பனிரெண்டு கால்கள் பனிரெண்டு மாதங்களையும் குறிப்பதாகக் பண்டிதர்கள் கூறுகிறார்கள். அந்த மனிதன் பிடித்துக் தொங்கிக் கொண்டிருந்த செடி கொடிகளின் வேர்களை அறுத்துக் கொண்டிருந்த எலிகள் மனிதனின் ஆயுளைக் குறைத்துக் கொண்டே கழிந்து கொண்டிருக்கும் இரவுகளும் பகல்களும் ஆகும். தேனீக்கள் என்பது பலவிதமான நமது ஆசைகள். அந்த ஆசையைத் தணித்துக்கொள்ளும்போது ஏற்படுகின்ற சுவைதான் தேன் துளிகள். மோட்சத்தின் பாதையை உணர்ந்தவர்கள், இந்த உவமை காட்டும் உண்மைகளைப் புரிந்துகொண்டு, ஆசைகளை அறுத்து வாழக் கற்றுக்கொள்கிறார்கள். மன்னரே! நீயும் அந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும்" என்று கூறுகிறார் விதுரர்.



குருப்ரியா

மேலும் அவர் கூறுகிறார்: "அரசே! இந்த வாழ்க்கை வாழை மரத்திற்கு ஒப்பானது. அதற்கு நிலைத்து நிற்கும் வலிமை கிடையாது. அறிவாளி, மூடன், செல்வந்தன், ஏழை, கற்றவன் கல்லாதன் வலியவன் எளியவன் எல்லோருமே இறுதியில் மரணத்தை எய்துகிறார்கள். மரணத்தை எய்திய அந்த மனிதர்களின் எலும்பு களையோ தசைகளையோ, நரம்புகளையோ வைத்துக்கொண்டு, எவன் எந்த நிலையில் இருந்தவன் என்று யாராலும் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலையை இறுதியில் எல்லோரும் அடைந்தாக வேண்டும் எனும்போது. அதற்கு முன்பாக ஒருவனுடைய நிலையையோ பதவியையோ வசதியையோ கண்டு அதைக் பெற்றுவிட வேண்டும் என்று மற்றொருவன் துடிப்பது அறிவீனம் அல்லவா? மண்பாண்டம் போன்றது மனித வாழ்க்கை, மண்பாண்டமானது எந்த நிலை யிலும் உடையலாம். அது சக்கரத்தில் ஏறியிருக்கும்போது பாதியிலே உடையலாம்; அல்லது முழுமையான பாத்திரமான பிறகும் உடையலாம்; அல்லது இறக்கிவைக்கப்பட்டு பிறகும் உடையலாம்; ஈரமாக இருக்கும் பொழுது உடையலாம்; அல்லது உலர்ந்த பொழுதும் உடையலாம். அது சூளையில் வைத்துச் சுடப்படும்போதும் உடையலாம்; அங்கிருந்து எடுக்கும்போதும் உடையலாம்: எடுத்து தரையில் வைக்கும்போதும் உடையலாம்: அல்லது அதை யாராவது உபயோகப்படுத்தும்போதும் உடையலாம்! அதே போல், மனிதன் கர்ப்பத்தில் இருக்கும்போதே இறந்துவிடலாம்; பிறந்த உடன் இறக்கலாம்; அல்லது சில நாட்களில் இறக்கலாம்; சில மாதங்களில் இறக்கலாம்; இளமையில் இறக்கலாம்; நடு வயதிலோ அல்லது கிழந்ததன்மையிலோ இறக்கலாம்! ஆக மண்டபாண்டம் போலவே, மனிதனுக்கும் மரணம் என்பது எந்த நிலையிலும் நிச்சயம்."

மேலே கூறப்பட்டுள்ளதன் பொருள் கூறப்போனால் வாழ்க்கை இவ்வாறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார் விதுரர். இந்த உலகத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் என்றைக்கும் எந்த விதத்திலும் பாதுகாப்பில்லை என்பது உறுதி. அவ்வாறிருக்கையில் மனிதர்கள் எந்த நம்பிக்கையில் வாழ்க்கையை மிகுந்த ஆசையுடன் ஏற்றுக்கொள்கின்றனர். "இந்த வாழ்விற்கு மேலே உன்னதமான, மிகுந்த பாதுகாப்பான ஒரு வாழ்க்கை உள்ளது. அங்கே அனைவரும் வாருங்கள்" என்று குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அழைக்கிறார்.

மனிதனின் நிரந்தரத்தேடலில் அவர் கூறியுள்ள விஷயங்களைப் பார்க்கும் போது இந்த வாழ்க்கை ஒரு கண்ணாடிப்பாத்திரம் போன்றதாகும். கண்ணாடிப்பாத்திரம் உடையாமலிருக்க வேண்டுமென்றால் அதை வைக்க வேண்டிய இடம் பாதுகாப்பான இடமாக இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் மட்டும்தான் பாத்திரம் உடையாமலிருக்கும். அதே போன்று நம் வாழ்க்கையாகின்ற பாத்திரம் உடையாமலிருக்க பாதுகாப்பான இடம் ஒன்று நிச்சயம் தேவை. அந்த நல்ல இடம் எங்கே இருக்கிறது என்றால் அதுதான் இறைவனின் சான்னித்தியம் . அங்கே யார் இருந்தாலும் நன்கே பாதுகாக்கப்படுவர். எனவே அனைவரும் குருதேவரின் அன்புமிக்க வார்த்தையை ஏற்றுக்கொண்டு அவர் கூறுவதைக் கடைவிடித்து இறைவனை தேடுவதில் உறுதி கொண்டு அவனை தேடிக்கண்டுபிடித்து இறைவனுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்! அதற்கான ஆயத்தங்களைச் செய்வது நன்று!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909


ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆன்மாவை தவிர்த்து மனித உடலில் உள்ள பொருட்கள்

நமது உடலானது எழுபத்தி இரண்டாயிரம் நாடிகளால் பின்னப் பட்டிருப்பதாக சித்தரியல் கூறுகிறது. இவற்றில் மிக முக்கியமானது பத்து நாடிகளாகும்.

இந்த நாடிகளின் ஊடே பத்து விதமான வாயுக்கள் ஓடுவதாக சித்தர் பெருமக்கள் கூறியிருக்கின்றனர். அவை முறையே

பிராணன் உயிர்க்காற்று

அபாணன் மலக் காற்று

வியானன் தொழிற்காற்று

உதானன் ஒலிக்காற்று

சமானன் நிரவுக்காற்று

நாகன் விழிக்காற்று

கூர்மன் இமைக்காற்று

கிருகரன் தும்மற் காற்று

தேவதத்தன் கொட்டாவிக் காற்று

தனஞ்செயன் வீங்கல் காற்று

இந்த வாயுக்கள் நமது நாடிகளின் ஊடே ஓடிக் கொண்டிருப்பதாகவும் சித்தர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதே போன்று நமது உடலில் உள்ள பொருட்களை மொத்தமாக தொகுக்கப்பட்டுள்ளது.

### 70 கிலோ கிராம் எடையுள்ள மனிதஉடலில் உள்ள மூலப் பொருள்கள்:

1. ஆக்ஸிஜன்......................43 கிலோ கிராம்
2. கார்பன் ............................16 கிலோ கிராம்
3. ஹைட்ரஜன் ...................... 7 கிலோ கிராம்
4. நைட்ரஜன்......................1.8 கிலோ கிராம்
5. கால்சியம்.......................1.0 கிலோ கிராம்
6. பாஸ்பரஸ்..................................780 கிராம்
7. பொட்டாசியம் ............................ 140 கிராம்
8. சோடியம் ..................................100 கிராம்
9. குளோரின் ..................................95 கிராம்
10. மக்னீசியம்................................. 19 கிராம்
11. இரும்பு ......................................4.2. கிராம்
12. ஃப்ளூரின் ..................................2.6 கிராம்
13. துத்தநாகம் .................................2.3 கிராம்
14. சிலிக்கன் .................................. 1.0 கிராம்
15. ருபீடியம்...................................0.68 கிராம்
16. ஸ்ட்ரோன்ட்டியம்.....................0.32 கிராம்
17. ப்ரோமின் ....................................0.26 கிராம்
18. ஈயம்.......................................... 0.12 கிராம்
19. தாமிரம் ..........................72 மில்லி கிராம்
20. அலுமினியம் ..................60 மில்லி கிராம்
21. காட்மியம்......................50 மில்லி கிராம்
22. செரியம்.........................40 மில்லி கிராம்
23. பேரியம் .........................22 மில்லி கிராம்
24. அயோடின்.......................20 மில்லி கிராம்
25. தகரம்.............................20 மில்லி கிராம்
26. டைட்டானியம்................20 மில்லி கிராம்
27. போரான்.........................18 மில்லி கிராம்
28. நிக்கல் ...........................15 மில்லி கிராம்
29. செனியம்...........................15 மில்லிகிராம்
30. குரோமியம்.....................14 மில்லி கிராம்
31. மக்னீசியம்.....................12 மில்லி கிராம்
32. ஆர்சனிக்.........................7 மில்லி கிராம்
33. லித்தியம்..........................7 மில்லி கிராம்
34. செஸியம்..........................6 மில்லி கிராம்
35. பாதரசம் ..........................6 மில்லி கிராம்
36. ஜெர்மானியம் ..................5 மில்லி கிராம்
37. மாலிப்டினம் ....................5 மில்லி கிராம்
38. கோபால்ட் ........................3 மில்லி கிராம்
39. ஆண்டிமணி.................2 மில்லி கிராம்
40. வெள்ளி ............................2 மில்லி கிராம்
41. நியோபியம் ....................1.5 மில்லி கிராம்
42. ஸிர்கோனியம்..................1 மில்லி கிராம்
43. லத்தானியம்..................0.8 மில்லி கிராம்
44. கால்ஷியம் ...................0.7 மில்லி கிராம்
45. டெல்லூரியம்.................0.7 மில்லி கிராம்
46. இட்ரீயம் ........................0.6 மில்லி கிராம்
47. பிஸ்மத் .........................0.5 மில்லி கிராம்
48. தால்லியம் ....................0.5 மில்லி கிராம்
49. இண்டியம் .....................0.4 மில்லி கிராம்
50. தங்கம்.............................0.4 மில்லி கிராம்
51. ஸ்காண்டியம்..................0.2 மில்லி கிராம்
52. தண்தாளம்......................0.2 மில்லி கிராம்
53. வாளடியம்....................0.11 மில்லி கிராம்
54. தோரியம் .......................0.1 மில்லி கிராம்
55. யுரேனியம் .....................0.1 மில்லி கிராம்
56. சமாரியம் .......................50 மில்லி கிராம்
57. பெல்யம் .........................36 மில்லி கிராம்
58. டங்ஸ்டன்......................20 மில்லி கிராம்.

மனித உடலின் மூலப் பொருட்களாக உள்ள மேற்கண்ட 58 தனிமங்களில் ஆக்ஸிஜன், ஹைட்ரஜன்போன்ற வாயுக்களைத் தவிர, மற்றத் தனிமங்கள் அனைத்தும் மண்ணிலிருந்து கிடைத்தவை.

மண்ணோடு மீண்டும் கலப்பவை என்பது குறிப்பிடத்தக்கது

மனிதஉடலின் வளர்ச்சி 21 வயதோடு நின்று பொய் விடுகிறது. கடைசிவரை வளர்வது காது மட்டுமே. ஆயிரம் வருடம் வரை உயிர் வாழ்ந்தால் நமது காது ஒரு குட்டி யானைக் காது அளவிற்கு இருக்கும்

ஒரு சராசரி மனிதனின் உடலில் இருக்கும் ரோமங்களின் எண்ணிக்கை சுமார் 5 லட்சம்.

உடலில் ரோமங்கள் இல்லாத இடங்கள் உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்கள் மட்டுமே. பகல் வேளையில் விழித்திருந்தாலும், ஆயிரக்கணக்கான முறைகண்ணை சிமிட்டுகிறோம். இதை மொத்தமாக ஆய்வு செய்தால் இரவைத் தவிர பகலிலும் பாதி நேரம் கண்ணை மூடிக் கொண்டு தான் இருக்கிறோம்.



www.aanmeegamalar.com

உடலின் வலுவான விஷயம், பல்லின்மீது இருக்கும் எனாமல்தான்.இது யானை தந்தத்தை விட வலுவானது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

விதம் விதமான பல்லாயிரக்கணக்கான வேலைகளை அலட்சியமாக செய்யக்கூடிய ஒரே ஆயுதம் நமது கை. தட்டில் இருக்கும் நூடுல்சை ஸ்பூனில் எடுக்கும்போது உடலில் உள்ள முப்பது இணைப்புகளும், 50 தசைகளும் இயங்க ஆரம்பிக்கின்றன.

நமது பாதங்களை பற்றி யோசித்தால் பிரமிப்பே மிஞ்சும் காரணம் ஒரு சதுர அடியில் வெறும் 3ல் ஒரு பங்கு உள்ள நமது பாதங்கள், 80 கிலோ எடையுள்ள நம் உடலை 70–80 வருடங்கள் தாங்கி நிற்கின்றன.

இதயம் ஒரு நாளைக்கு சுமார் ஒரு லட்சம் தடவை சுருங்கி விரிகிறது. வருடத்திற்கு நான்கு கோடி தடவை. இதயத்தின் இடதுபக்கத்தை விட வலது பக்கம் சற்று பெரியதாக இருக்கும்.

நமது உடலில் நாலு அவுன்ஸ் சர்க்கரை, இரண்டு நீச்சல் குளங்களை அப்புறபடுத்த தேவையான க்ளோரின், 3 பவுண்டு கால்சியம், 20 ஆயிரம் தீக்குச்சிகள் உருவாக்க கூடிய அளவிற்கு பாஸ்பரஸ், 10 பார் சோப்புகளுக்கு தேவையான கொழுப்பு ஒரு ஆணி செய்யக்கூடிய அளவுக்கு இரும்பு என பல பொருட்கள் உள்ளன.

மனித இயக்கத்திற்குதேவையான பொருட்களின் அளவை தெரிந்து கொண்டாலும், அவன் ஆசைப்படும் எல்லையை மட்டும் அளக்க முடியாததால்தான் உலகில் பல பிரச்சனைகள் அரங்கேறிவருகிறது.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com




# சிதம்பரம் நடராஜருக்கு உகந்த
# மார்கழி மாதம்

சிவபெருமான் கோவில்களில் 6 கால பூசைகள் நடப்பது முறை. ஆனால் சிதம்பரத்தில் நடராஜ பெருமானுக்கு தினமும் அபிஷேகம் இல்லை. வருடத்திற்கு 6 முறை மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது.

மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பது, தேவர்களுக்கு ஒரு நாள்.

ஒரு நாளிலே...

- ❖ வைகறை.,
- ❖ காலை.,
- ❖ உச்சி.,
- ❖ மாலை.,
- ❖ இரவு.,
- ❖ அர்த்தஜாமம்...

ஆகிய ஆறு பொழுதுகள் உண்டு.

- ❖ வைகறை – மார்கழி மாதம்.
- ❖ காலை – மாசி மாதம்.
- ❖ உச்சி காலம் – சித்திரை மாதம்.
- ❖ மாலை – ஆனி மாதம்.
- ❖ இரவு – ஆவணி மாதம்.
- ❖ அர்த்த ஜாமம் – புரட்டாசி மாதம்.

இந்த ஆறு அபிஷேகங்களையும்குறிக்கும் விதமாகத்தான். கோவில்களில் தினமும் இறைவனுக்கு ஆறுகால பூஜைகள் நடத்தப்படுகின்றன.

(சில சிவன் கோவில்களில் மட்டுமே ஆறுகால பூஜைகள் நடை பெற்று வருகின்றன.)

ஆண்டுக்கு ஆறுமுறை நடைபெறும் இந்தசிறப்பு அபிஷேகங்களில், மார்கழி மாத திருவாதிரை அபிஷேகமும், அடுத்ததாக ஆனிமாத திருமஞ்சன அபிஷேகமும் சிறப்பு மிக்கதாக உள்ளது.

கோடையின் கடும் வெப்பம் தணிந்து இதமான தட்பவெப்பம் துவங்குவது ஆனி மாதம் தான்.

ஆகவே அகில உலக நாயகனாகிய சிவபெருமானை குளிர்விக்கும் பொருட்டு, வெம்மையின் நாயகனாகிய சூரிய பகவானின் ஆதிக்கம் பொருந்திய உத்திர நட்சத்திரத்தன்று அவருக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறது.

மேலும், பெருமானின் திருமேனி குளிர்ந்தால் அண்ட சராசரமும் குளிர்ந்து, காலம் தவறாமல் மழை பொழிந்து, பயிர்கள் நல்ல முறையில் விளைந்து உலகை வாழ்விக்கும் என்பது ஐதீகம்.





சிதம்பரத்தில் நடராஜ பெருமானும், சிவகாமி அம்மையும், ஆண்டிற்கு இருமுறை மட்டுமே சிற்சபையை விட்டு வெளியே வந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கின்றனர்.

மார்கழி, ஆனி மாத மகோற்சவ புண்ணிய காலங்களில் நடைபெறும் ரத உற்சவத்தன்றும், மறுநாள் தரிசனத்தன்றும் மட்டுமே அம்மையப்பன் இருவரும் சிற்சபையை விட்டு எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளிப்பார்கள்.

ஆனி திருமஞ்சன தினத்தன்று, தில்லை நடராஜப் பெருமானின் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெறும். அதன் பிறகு, இறை மூர்த்தங்களை திருக் கோவிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந் தருளச் செய்வார்கள்.

100 தீட்சிதர் பெருமக்களால் ஏககால லட்சார்ச்சனை நடைபெற்று அதன் பின்பு, சுமார் 2 மணி நேரத்திற்கு பெருமளவிலான பொருட்களால் மகா அபிஷேகம் விசேஷமாக நடைபெறும்.

அதன் பின்னர் நிறைவாக பலவித மலர்களால் புஷ்பாபிஷேகமும் நடத்தபெறும்.

அதன் பின்னர், மகா தீபாராதனை ஆன பின், அம்மையும், அப்பனும்...

ஆனந்த நடனம் புரிந்தவாறே, சிற்சபைக்கு எழுந்தருள்வதை காணக் கண் கோடி வேண்டும்.

இங்கு சிவபெருமான்....

- ❖ அருவம்.,
- ❖ உருவம்.,
- ❖ அருவுருவம்.,

ஆகிய மூன்று நிலைகளில் வழிபடப்படுகிறார்.

- ❖ அருவம் என்பது உருவமற்ற நிலை...
- ❖ உருவம் என்பது கண்ணுக்குத் தெரியும் வடிவநிலை....
- ❖ அருவுருவம் என்பது உருவமும் அருவமும் கலந்த நிலை.....

இம்மூன்று நிலைகளும் உள்ள தலமாக சிதம்பரம் உள்ளது.....

- ❖ அருவ நிலைக்கு சிதம்பர ரகசியமும்.,
- ❖ உருவநிலைக்கு நடராஜரும்.,
- ❖ அருவுருவ நிலைக்கு மூலவர் மூலட்டானேஸ்வர் லிங்க வடிவிலும் இங்கு அமைந்துள்ளனர்...

இதனை தரிசிப்பவர் வேண்டும் வரங்களையும்., பிறவி பயன்களையும்., பெரும் புண்ணியங்களையும் அடைவார்கள் என்று பல்வேறு புராணங்கள் கூறுகின்றன.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# மனிதன் மகானாகிறான்

சிந்தனை செய்ய முடியாதவர்களுக்கு, சிந்தனை செய்ய உச்சவரம்பே கிடையாது. ஆனால் சிந்தனை செய்யத் தெரிந்தவர்களுக்கு உச்சவரம்பு உண்டு. தவறாய் சிந்திக்காமல் இருப்பதற்கே, இந்த உச்சவரம்பு.

❖❖❖

ஆசைகள், வாழ்க்கையெனும் பாதையில் வழியில் கிடக்கின்ற உடைத்துப் போட்ட பெரிய சிறிய கற்களே. இவைகளைச் சமன் செய்து சாலையமைத்தால் தான் வாழ்க்கை சுகமாக இருக்கும்.

❖❖❖

எது கரடு முரடான பாதை என்பதைக் கண்டு பிடிப்பவனே மனிதனில் மேதை.

❖❖❖

பக்தி இல்லாத மனிதனின் சிந்தனை கரடு முரடு ஆனதே. இதனால் அருள் பெற்ற மனிதனால் மட்டுமே முன்னேற முடிகிறது.

❖❖❖

“உத்தரவின்றி உள்ளே வா” என்பது உன் மனம் தான். உன்னிடம் மனமிருந்தால் ஆண்டவன் அங்கே நுழைந்துவிடுவான். இதன் பெயரே பக்தி.

❖❖❖

எள்ளிலிருந்து எண்ணெயைப் பிழிவேன். அதுபோல் கடவுள் எங்கிருந்தாலும் அவனைக் கொண்டு வருவேன் என்று சொல்லுங்கள். ஆண்டவன் உடனே அருள் செய்து விடுவான்.

❖❖❖

மறைவான பயமே, மனித மனம் இடிந்து விழக் காரணமாய் உள்ளது. இந்த பயத்தை நீக்கு. முன்னேறு.

❖❖❖

சுரங்கத்தில் இறங்கி, சுரங்கத் தொழிலாளி வேலை செய்வது போல் உன் மனதுள் ஆண்டவன் இறங்கி உன்னை உயர்த்துகிறான். பிறகே நீ ஞானியாக ஆக முடியும்.

❖❖❖

சமுதாயத்தில் அனாதையாகிவிட்டால் மனிதன் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.

❖❖❖

நோக்கம் என்பது படகு போன்றது. உலகில் உனக்கு நோக்கம் இல்லை என்றால் உனது நோக்கம் கடவுளையே நோக்கிச் செல்லும்.

❖❖❖

சமுதயாத்திற்கு மனிதன் உழைக்கலாம். உழைக்காமலும் இருக்கலாம். ஆனால் முடிவு செய்த மனிதனே எதையும் செய்ய முடியும். இதுவே உண்மை.

❖❖❖

இறைவனின் திருவடியை உணர்ந்து அதனருகில் உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுதே மனிதனுக்கு திருப்தி ஏற்படும்.

❖❖❖

மகான்களும் மனிதர்கள் தான். சமமமான மனநிலை ஏற்பட்டால் சிந்தனை சமநிலையாகி பின் சித்தம் நிலையாகி மனிதன் மகானாகிறான்.

❖❖❖

உலகில் எது அவசரம்? எது நிதானம்? என்று தெரிவது தான் ஞானம். உடனே தெளிவு வேண்டும் என்பது அவசரம். இறைவனைப் பார்த்த இடத்தில் சந்தோஷப்படுவது நிதானம்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# திருமண யோகம் தரும் மார்கழிப் பெண்மணி






எங்கள் வீட்டு பக்கத்தில் ஒரு பெண்ணிருக்கிறாள். பார்ப்பதற்கு மூக்கும் முழியுமாக அழகாக இருப்பாள். நன்றாக படித்திருக்கிறாள். பாடுவாள். சமைத்தால் நளபாகம் போலிருக்கும். அன்பானவள், அமைதியானவள். நல்லவர், கெட்டவர் அனைவரையும் அனுசரித்து போக தெரிந்தவள். என்ன பண்பு இருந்து என்ன பிரயோஜனம்? வயது முப்பதுக்கு மேலே தாண்டுகிறது. இன்னும் திருமணம் ஆகவில்லை. அவள் வயதை ஒத்தவர்கள் தனது பிள்ளைகளுக்கு மஞ்சள் நீராட்டு விழா கூட முடித்துவிட்டார்கள். இவளுக்கு மட்டும் ஏனோ இன்னும் வழி பிறக்கவில்லை. பெற்றவர்கள் கண்ணீர் விட்டு கதறாத நாளில்லை.

ஊர் ஊராக சென்று ஜோதிடர்களை பார்த்தாகிவிட்டது. வாக்கு பலித சித்தர்களின் வாக்குகள் எல்லாம் காற்றோடு கலந்து போனதே தவிர காரியம் நடக்கவில்லை. பரிகாரத்திற்கு செய்த செலவில் இரண்டு கல்யாணம் நடத்தலாம். ஜாதகங்கள் ஒத்து வராது ஒரு வேளை ஒத்து வந்து நெருங்கே பேசினால் மாப்பிளை எதாவது ஒரு குறையோடு இருப்பான் அல்லது பெண்ணை பிடிக்கவில்லை என்று சொல்லி விடுவான். இல்லை என்றாலும் எதாவது ஒரு காரணம் முன்னே வந்து விவகாரத்தை நடக்க விடாமல் தடுத்து விடும். பாவம் அந்த பெண்ணிற்கு விமோசனமே இல்லையா? காலம் முழுக்க கன்னியாகவே இருந்து விட வேண்டியது தானா? ஏதாவது வழி சொல்லுங்கள் என்று ஒரு பெண்மணி என்னிடம் கண்ணீர் விட்டு கேட்டாள்.

இப்படி என் காதுக்கு வருவது ஒரு குறையா, இரு குறையா? தினசரி பத்து கதைகளாவது இப்படி கேட்க வேண்டும். அந்த பையன் நல்லா படித்து அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறான். கை நிறைய சம்பாதிக்கிறான். வீடு, வாசல், சொத்து சுகமென்று எதற்கும் குறைவில்லை. பிக்கல், பிடுங்கல் இல்லாத குடும்பம். ஆனாலும், நாற்பது வயதை கடந்தும் கல்யாணம் ஆகவில்லை. திருமண ஆசை இல்லை என்றாலும் கூட, ஆண்மகனை தனித்து விட்டு விடலாம். ஆனால், இவன் பாவம் எல்லோரையும் போல மனைவி மக்கள் என்று வாழ துடிக்கிறான். தனது நண்பர்கள் குழந்தைகளோடு போகும் போது ஏக்கம் கொள்கிறான். நகை நட்டு இல்லாமல் நல்ல பெண்ணாக அமைந்தால் கூட போதுமென்று பார்க்கிறான். ஆனாலும், எதோ ஒன்று தடுக்கிறது. இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் எங்கிருந்தோ ஒரு அமங்கல மணியோசை நிற்காமல் கேட்டுக்கொண்டே இருக்கிறது. இதற்கு என்ன காரணம்?

ஜாதகக் கோளாறுகளால் இப்படி நடக்கலாம். பித்ரு தோஷம், பெண் தோஷம், தெய்வ தோஷம், சாபம் என்று பல காரணங்களும் அடிநாதமாக இருக்கலாம். குடும்பத்தார் செய்த பாவம் இவர்களை தொடரலாம் அல்லது இவைகள் எதுவும் இல்லாமல் எல்லாம் சரியாக இருந்தும் சிலருக்கு மட்டும் இந்த சோகம் இருந்து கொண்டே இருக்கலாம். ஆகவே இது தான் காரணமென்று முற்றிலுமாக துணிந்து கூறமுடியாத எத்தனையோ கண்ணுக்கு தெரியாமல் மறைந்து கிடக்கிறது. அவைகள் ஒவ்வொன்றையும் தேடித் தேடி பரிகாரம் செய்து கொண்டே போனால் அதற்குள் காலமும் கடந்து விடுகிறது. வாலிபமும் முடிந்து விடுகிறது. விடிந்த பின்னால் விளக்கு எரிவது போல, வாலிபம் முடிந்த பிறகு திருமணம் நடந்தால் என்ன? நடக்காமல் போனால் என்ன? இத்தகைய துரதிருஷ்டசாலிகளின் வாழ்க்கைக்கு விமோசனமே கிடையாதா?

பகவத் கீதையில் வாசுதேவ கிருஷ்ணன் சொல்கிறான். மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று. மார்கழி மாதம் தெய்வங்களுக்கு உகந்த காலம். காரணம், அந்த நேரம் தான் தேவர்களின் விடியற்காலை பொழுது. காலை எழுந்தவுடன் நமது மனதும், உடம்பும் தெம்பாக புத்துணர்ச்சியாக இருக்கும்



அல்லவா? அதே போன்று தான் தேவர்கள் மார்கழி மாதம் முழுவதும் ஆனந்தமாக இருப்பார்கள். இந்த நேரத்தில் அவர்களை நோக்கி வைக்கப்படும் பிரார்த்தனைகளையும், விண்ணப்பங்களையும் அவர்கள் செவி கொடுத்து கேட்டு, உடனடியாக தீர்த்து வைப்பார்கள். அதுவும் குறிப்பாக மார்கழி மாத பௌர்ணமிக்கும், பூமியில் வாழுகிற உயிர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு அன்று ஏற்படுகிறது.

வருடத்தில் பனிரெண்டு மாதம் வருகிறது. மாதம் தோறும் பௌர்ணமி வருகிறது. ஒரு மாதத்து பௌர்ணமியை போலதானே அடுத்த மாதத்து பௌர்ணமியும் இருக்கும் என்று நம்மை போன்ற சாதாரண மனிதர்கள் நினைக்கிறோம். அது முற்றிலும் தவறு. மார்கழி மாதம் என்பது தேவர்களுக்கு மட்டும் உகந்த நேரமல்ல. மனிதர்களுக்கும் அது சிறந்த நேரமாகும். மார்கழி மாதம் விடியற்காலை நேரம் குளிர்ந்த நீரில் குளித்து, வெறும் காலோடு ஆலயத்தையோ, அருகிலுள்ள மரங்களையோ வலம் வந்து வழிபாடு செய்தால் உடம்பில் உள்ளே உள்ள உறுப்புகளுக்கு புதிய இரத்தம் புத்துணர்வோடு கிடைக்கிறது. இரத்தத்தில் உள்ள பிராண வாயு அதிகரித்து, மூளையின் நரம்புகளில் உள்ள அழுத்தத்தை போக்குகிறது. இதனால், நமக்கு அறிவு செம்மையாகிறது. உடல் முழுவதும், ஆரோக்கியத்தின் இரகசிய வாயில் கதவுகள் திறக்கப்படுகிறது. குறிப்பாக சொல்லப் போனால் இந்த மாத பௌர்ணமியில் வானத்திலிருந்து பூமிக்கு வருகிற நல்லவிதமான ஈர்ப்பாற்றல், மனிதர்களின் தீராத குறைகளை தீர்க்கவல்லதாக இருக்கிறது.

சிதம்பரம் நடராஜரின் நர்த்தனம், உலகத்தின் இயக்கத்தை குறிக்கிறது என்பதை நாமறிவோம். இப்படிப்பட்ட ஒரு நடனம் உலகம் உலகமாக தோன்றுவதற்கு முன்பு, இதே போன்ற பௌர்ணமி தினத்தில் தான் இறைவன் திரு நடனம் ஆடியதாக கூறப்படுகிறது. அந்த ஆட்டத்தின் வேகம் இன்று வரை இருக்கிறது என்றாலும், அது துவங்கிய நாள் புனிதமானது மட்டுமல்ல. பல விஷேசம் நிறைந்ததாகவும், கண்டிப்பாக இருக்கிறது. கண்ணனை நினைத்து, கண்ணனை காதலித்து கண்ணனுக்காகவே தன்னை அர்ப்பணித்து ஆண்டாள் நோன்பிருந்ததும் இந்த காலத்தில் தான். ஆண்டாளின் நோன்பும், ஆண்டவனின் நடனமும் நமக்கு என்ன காட்டுகிறது என்றால், பௌர்ணமி மார்கழி மாதத்தில் வெறும் வெளிச்சம் தருவதாக மட்டும் இல்லை. மனிதர்களின் சிக்கல்களுக்கு விடிவு தருவதாகவும் இருக்கிறது என்பதை நமக்கு அழகாக காட்டுகிறது.

எனவே திருமணமே முடியாது, தனக்கு இல்லறமே கிடையாது என்று நினைத்து கொண்டிருப்பவர்கள் மார்கழி மாத பௌர்ணமி தினத்தில் காலை முதல் இரவு வரை தனக்கு பிடித்தமான இறைவனின் திருநாமத்தை ஜெபித்த வண்ணம் இருந்து விரதம் இருந்தால் கண்டிப்பாக அவர்களது குறைகள் விலகும். சூடான வாழ்க்கையில் இருளான பக்கத்தில் குளிர்ச்சியும் கிடைக்கும். வெளிச்சமும் வரும் என்று உறுதியாக கூறலாம். இது வெறும் ஆறுதல் மொழிகள் அல்ல. அனுபவ மொழிகள் என்பதனால் எல்லோரும் நம்பலாம்..



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
டவுன்லோடு
செய்து படிக்கலாம்



# கற்றுகொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள்

- ஒரு நாளும் ஒன்றையும் படிக்காம லும், ஒரு வரியாவது, ஒரு சொல் லையாவது கற்காமலும், நல்ல காரி யங்களில் ஈடுபடாமலும் செல்ல வேண்டாம்.
- நல்ல குடும்பத்தில் பிறந்தாலும், நல்ல வசதிகள் இருந்தாலும் கல்வி கற்காவிடின் ஒருவன் வாசனையற்ற மலரை போன்றவன் ஆவான்.
- உங்கள் குழந்தையை 5 வயது வரை கொஞ் சுங்கள், 5 15 வயது வரை தவறு செய்தல் தடியால் கண்டியுங்கள். 15 வயதுக்கு மேல் நண்பனாக நடத்துங்கள்.
- கற்பது பசுவை போன்றது, அது எல்லா காலங்களிலும் பால் சுரக்கும், அது தாயை போன்றது எங்கு சென் றாலும் நம்மை காக்கும், ஆதலால் கற்காமல் ஒரு நாளும் வீணாக செல்ல வேண்டாம்.
- கடலில் பெய்யும் மழை பயனற்றது, பகலில் எரியும் தீபம் பயனற்றது, வசதி உள்ளவனுக்கு கொடுக்கும் பரிசு பயனற்றது, நோய் உள்ளவனுக்கு கொடுக்கும் அறுசுவை உணவு பயனற்றது. அதுபோல் முட்டாளுக்கு கூறும் அறிவுரையும் பயனற்றது.
- காமத்தை விட கொடிய நோய் இல்லை. அறியாமையை விட கொடிய எதிரி இல்லை. கோவத்தை விட கொடிய நெருப்பு இல்லை,எவன் ஒருவனுக்கு செல்வம் இருக்கிறதோ, அவனுக்கு உறவினர்கள் உண்டு, நண்பர்கள் உண்டு. பணம் இருப்பவனைத் தான் உலகம் மனிதனாக மதிக் கிறது. அவனைத்தான் அறிவாளி, பண் டிதன் என்று உலகம் போற்றுகிறது.
- பிறவி குருடனுக்கு கண் தெரிவ தில்லை, அது போல் காமம் உள்ளவனுக்கு கண் தெரியாது, பெருமை உள்ளவனுக்கு கெடுதி தெரியாது, பணம் செய்யவேண்டும் என்ற எண்ணம் உள்ளவனுக்கு பாவம் தெரியாது.
- பேராசை கொண்டவனை பரிசு கொடுத்தும், பிடிவாதம் உள்ளவனை சலாம் போடுவதன் மூலமும், முட்டாளை நகைச்சுவை மூலமும், அறிவாளியை உண்மையான வார்த்தை மூல மும் அணுகலாம்.
- சிங்கத்திடம் இருந்து ஒன்றையும், கொக்கிடம் இருந்து இரண்டையும், கழுதையிடம் இருந்து மூன்றையும், கோழியிடம் இருந்து நான்கையும், காக்கையிடம் இருந்து ஐந்தையும், நாயிடம் இருந்து ஆறு விஷயங்களையும் நாம் கற்று கொள்ள வேண்டும்.
- சிங்கம் எந்த ஒரு விஷயத்தையும் உடனடியாக செய்யாது, நன்கு ஆலோசனை செய்த பின்பு முழு மனதுடன் உறுதியாக செயல்படும்.
- கொக்கு ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரை காத்து நிற்கும், அதுபோல் அறிவாளி ஒரு காரியத்தை செய்வதற்கு முன் காலம், இடம், தன் ஆற்றல் கூடும் வரை காத்திருந்து செய்வான்.
- களைப்புற்றாலும் கழுதை தன் வேலையை தொடர்ந்து செய்யும், வெயில், மழை என்று பாராமல் உழைக்கும், தன் முதலாளிக்கு கட்டு பட்டிருக்கும். ஆகிய மூன்றும் கழுதையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷ யங்கள் ஆகும்.
- விடியற்காலை எழுதல், தைரியமாக சண்டை யிடுதல், அவர் அவர்க்கு தேவையானவற்றை பிரித்து கொடுத்தல், தனக்கு தேவையானவற்றை தானே உழைத்துத் தேடி சம்பாதித்தல் ஆகிய நான்கும் சேவலிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.
- இரவில் மனைவியுடன் சேர்ந்து இருத்தல், தேவையான பொருள்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய ஐந்தும் காக்கையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.



# கஜானன் மகராஜ்

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 5

கஜானன் மகராஜ் எனப் பிரபலமாக அழைக்கப்பட்ட ஸ்ரீ கஜானன் அவதூதரின் இளமைக்கால வாழ்க்கை பற்றி ஆதாரப்பூர்வமான செய்திகள் எதுவுமில்லை. மஹாராஷ்டிராவில் உள்ள சஜ்ஜன்கர் என்னும் இடத்தில் அவர் பிறந்தார் என்று மக்கள் ஊகம் செய்தாலும், அவர் பிறந்த இடம், பிறந்த தேதி, அவரது பெற்றோர் இவையாவும் புரியாத புதிராகவே உள்ளன. ஸ்ரீ ஷீரடி சாய்பாபா, ஸ்ரீ கஜானன் அவதூதர் போன்ற ஞானிகள் தங்கள் கடந்த காலத்தைப்பற்றி வெளிப்படுத்தவில்லை. ஸ்ரீ சாயிநாதரையுடைய பிறப்பைப் பற்றியும் உறுதிப்படுத்தப்படாத பல கதைகள் உள்ளன.

மஹாராஷ்டிராவில் உள்ள ஷேகாவ்ன் என்னும் கிராமத்தின் வெளிவட்டாரத்தில், குப்பைமேட்டில் தூக்கி எறியப்பட்ட உணவுப் பண்டங்களை ஸ்ரீ கஜானன் அவதூதர் சேகரித்துக் கொண்டிருக்கும்போதுதான், பங்கத்லால் அகர்வால் என்ற ஒருவரால் முதன்முதலாகக் கவனிக்கப்பட்டார். நல்ல ஆரோக்கியமான, ஒளி வீசுகின்ற உடலைப் பெற்றிருந்தபோதும், விழிப்புணர்வின் உச்சகட்ட நிலையில் அப்போது அவர் இருந்ததால், தம் உடலைப் பற்றிய உணர்வே இல்லாமல் ஆடைகள் எதுவும் இல்லாமல் இருந்தார். பங்கத்லால், இவரின் நடவடிக்கையை பார்த்து, இவர் ஒரு சித்தராக இருக்கக்கூடும் என உணர்ந்தார். அது 1878ம் வருடம் பிப்ரவரி 23வது நாள். பங்கத்லால், அவருடைய நண்பர் தாமோதர் பந்த் குல்கர்ணியுடன் மகராஜை பணிவுடன் நெருங்கி, 'மகராஜ், தூக்கி எறியப்பட்ட இவ்வுணவை நீங்கள் ஏன் உண்ண வேண்டும்? நீங்கள் பசியோடு இருந்தால், அதற்கு தகுந்த ஏற்பாடுகளை நிச்சயம் நான் செய்து தருகிறேன் என்று கேட்டார். இருப்பினும் மகராஜ் அவரது சொற்களுக்குச் செவிசாய்க்காமல், எந்தவிதப் பற்றுமில்லாமல் தம்முடைய உணவைத் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அதைக் கண்ட பங்கத்லால், அருகிலுள்ள ஆஸ்ரமத்திற்கு சென்று, கிடைத்த உணவைச் சேகரித்துக் கொண்டு மகராஜிடம் திரும்பி வந்தார். அந்த உணவை அளித்தபோது, மகராஜ், எல்லா உணவு வகைகளையும் ஒன்றாகக் கலந்து அப்படியே விழுங்கினார். ஞானிகளுக்கு இந்த நிலையில் ருசி என்ற உணர்வே இருக்காது என்பதை நாம் உணரவேண்டும். பின்னர் ஆடுமாடுகளுக்கு என வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டியிலிருந்து மகராஜ் தண்ணீர் குடிக்கலானார். இதைப் பார்த்து திகைத்த பங்கத்லால், தான் ஒரு சாதாரண மனிதர் முன்னால் அல்ல, மிகுந்த உயர்ந்த நிலையை அடைந்த ஆத்மாவின் முன் இருக்கிறோம்




என்பதை உணர்ந்தார். பயபக்தியுடன் அவரை வீழ்ந்து வணங்கி, அவரது ஆசிகளை வேண்டி நின்றவர், தன தலையை நிமிர்ந்து பார்த்தபோது, மகராஜ் மறைந்து விட்டார்!

மறைவதும், பின் மீண்டும் தோற்றமளிப்பதும், முன் காலத்தில் இந்திய யோகிகள் பெற்றிருந்த அஷ்டமாசித்திகளில் ஒன்றாகும். மகாராஜின் திடீர் மறைவினால் பங்கத்லால் மிகுந்த வருத்தமும், உற்சாகமற்ற நிலையையும் அடைந்தார். ஆனால் அதேசமயம், தானாகவே அந்த நேரத்தில் அங்கு வந்த கஜானன் அவதூதர்தான் தன்னுடைய சத்குரு என்பதை அவர் சிறிதும் அறியவில்லை. சத்குருக்கள் அல்லது பரிபூரணமடைந்த குருக்கள், ஆன்மீக இலக்கை நோக்கித் தன சீடர்களை வழிநடத்திச் செல்ல, அதற்குரிய நேரத்தில் சீடர்களைத் தம் பக்கம் இழுப்பர் அல்லது அவர்களை நாடிச் செல்வர். எல்லா நேரமும் பங்கத்லால், கஜானன் மகராஜ் நினைவிலேயே இருந்தார். அன்று முழுவதும், அவரை தேடியும், அவருக்கு வெற்றி கிட்டவில்லை. இருப்பினும், மாலையில், அவர் ஒரு கீர்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள பழைய சிவாலயத்திற்குச் சென்றபோது அங்கு மகாராஜை மீண்டும் கண்டார். அவரைக் கண்டதும் மிகுந்த மகிழ்ச்சியுற்று, உணர்ச்சியில் தொண்டை அடைக்க, மகாராஜை தன் வீட்டிற்கு வந்து தங்குமாறு வேண்டிக்கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி மகராஜ் அவர் வீட்டிற்கு வந்தார். அங்கிருந்து அவரது தெய்வீக லீலைகள் தொடங்கின.

எல்லா மனிதப் பிறவிகளுக்கும், மற்றும் ஜீவராசிகளுக்கும் ஆன்மீக எழுச்சியை நோக்கி ஓர் உலகளாவிய உந்துதல் கொடுப்பதே சத்குருவின் வேலையாகும். ஜாதி, மதம், பால், தேசம் மற்றும் ஜீவராசிகளின் இடையே உள்ள வேறுபாடுகள் இவை எதுவும் அவர்களுக்குப் பொருட்டல்ல. அவர்கள் மனிதர்களுடன் உள்ளபோது மனிதர்களாகவும் மிருகங்களுடன் இருக்கும் போது அவற்றுடன் ஒன்றி மிருகங்களாகவும் உள்ளனர். அவர்கள் இந்த நிலையை அடையத் தொடங்கியவுடன் கண்ணுக்கு தெரியாத சக்தியால் இழுக்கப்பட்டதுபோல், எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் அவர்களைத் தேடி வருகின்றனர். உண்மையில், இதைதான் ஸ்ரீ ஷிர்டி சாய்பாபா எப்போதும் கூறுவார்; 'காலில் கட்டிய நூலைக் கொண்டு ஒரு பறவையை இழுப்பது போன்று நான் என் குழந்தைகளை ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்தும் இழுத்துக் கொள்கிறேன்'.

கஜானன் அவதூதரின் வரவுக்குப்பின், பல்வேறு இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள், இவ்வுலக வாழ்வின் நன்மைக்கும், ஆன்மீக முன்னேற்றத்திற்கும் எனப் பங்கத்லால் வீட்டினில் கூட ஆரம்பித்தனர். பங்கத்லால், தன்னால் இயன்ற அளவு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயன்றார். ஒரு பூரணமடைந்த சத்குருவை ஒருவரின் விருந்தாளியாக உபசரிப்பது என்பது எளிதானது அல்ல. சாதாரண மனிதனுக்கு சத்குருவின் நடவடிக்கைகள் சில சமயங்களில் கொஞ்சம்கூட ஊகிக்கமுடியாததாக இருக்கும். சில நேரங்களில் குழந்தைகள் போலும், சில நேரங்களில் பைத்தியம் போலும், மற்றும் சில நேரங்களில் ஏதோ ஆட்கொள்ளப்பட்டவர்கள் போலும் அவர்கள் நடந்து கொள்வர். எப்படி இருந்தாலும், அவர்கள் எது செய்தாலும், அது மற்றவரின் நன்மைக்காகவே இருக்கும். சத்குருவின் செயல்களுக்குப் பின்னால் உள்ள நோக்கத்தை ஆன்மீகத்தில் மிகுந்த எழுச்சி பெற்றவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

ஒருவர் வாழ்வில், சத்குருவின் பாதுகாப்பு என்பது மிகவும் வலிமை வாய்ந்த படைக்கலமாகும். ஏனெனில், தன் குழந்தைகளைக் காப்பதற்காகச் சத்குரு எந்த அளவுக்குச் செல்வார் என்பதை யாராலும் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. ஒருமுறை, கஜானன் மகராஜ் பங்கத்லாலின் அழைப்பிற்கிணங்கி, அவருடைய விவசாயப் பண்ணைக்கு மக்காச்சோளம் உண்பதற்குச் சென்றார். பக்தர்கள் கூட்டத்துடன் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து, தீமூட்டி, சோளத்தைச் சுட ஆரம்பித்தனர். மரத்தின் மேல் ஒரு தேன்கூடு இருப்பதை யாருமே கவனிக்கவில்லை! தீயினின்றும் புகை கிளம்பிக் கூட்டை அடைந்ததும், தேனீக்கள் படையாக வெளிவந்து எல்லாரையும் கொட்ட ஆரம்பித்தன. மகாராஜைத் தவிர மீதி எல்லாரும் ஓடி விட்டனர். பின்பு எல்லா தேனீக்களும் மகாராஜின் உடலில் தங்கிவிட்டன. மகராஜ் சிறிதும் அசையாமல் அங்கேயே அமர்ந்திருந்தார். தூரத்திலிருந்து இதனைக்கண்ட பங்கத்லால், மகாராஜின் நிலைமை கண்டு வருத்தமுற்றார். அவர் மகராஜை நெருங்கி உதவிட எண்ணியபோது, மகராஜ் தேனீக்களைப் பார்த்து 'நீங்கள் உங்கள் இடத்துக்கு திரும்பிச் செல்லுங்கள்' என்னுடைய அன்பான பக்தன்

பங்கதலால் இங்கு வருகிறான். அவனுக்கு எதுவும் துன்பம் நேரிடக்கூடாது' என்று கூறினார். அவர் இந்த வார்த்தைகளைக் கூறிய மறுகணமே, தேனீப்படைகள் முழுவதும் கூட்டிற்குத் திரும்பின. பக்தர்கள் திரும்பி வந்து பார்த்தபோது, மகராஜ் புன்னகை புரிந்து, ஆழ்ந்து மூச்சை உள்ளிழுத்தார். உடனே, எல்லாக் கொடுக்குகளும் அவர் உடலிலிருந்து நூற்றுக்கணக்கில் உதிர்ந்தன. மக்களும் ஆறுதலடைந்தனர். சத்குருவானவர் தம் குழந்தைகளைக் கஷ்டப்பட அனுமதிக்காமல், வலி அனைத்தையும் அவரே ஏற்றுக்கொள்கிறார்.

இவர் கணபதியின் அம்சமாக கருதப்படு கிறார். அனவரதமும் 'கண் கண் கணாத் போல்' என்று ஜெபிப்பார். இதை போன்ற எண்ணற்ற அற்புதங்களை இந்த சித்த அவதூதர் புரிந்திருக் கிறார். அவற்றுள் சில:

அற்புதங்கள்

- அசுத்தமான குட்டையிலிருந்து தெளிந்த நீரை வரவழைத்தார்.
- கோவிந்தபுவாவிற்கு மறந்துபோன ஸ்லோகங்களை நினைவூட்டினார்.
- ஜனாராவ் என்னும் பக்தரின் உயிரை காப்பாற்றிய அற்புதம்.
- காண்டேராவிற்கு மழலை செல்வம் அளித்தது.
- வேதபாராயணம் செய்து அந்தணர்களின் கர்வத்தை அழித்தது.
- போலி சன்யாசி ப்ரம்மகிரிக்கு பகவத் கீதை யின் உட்பொருளை விளங்கவைத்து திருத்தியது.
- மதம் கொண்ட குதிரையை அடக்கியது.
- ஸ்ரீ சமர்த்த ராமதாஸரின் ரூபத்தில் பாலகிருஷ் ணன் என்னும் பக்தனுக்கு காட்சி அளித்தது.
- கங்காபாரதியின் தொழுநோயை நீக்கிய அற்புதம்
- காலரா வ்யாதியின் கொடுமையிலிருந்து காப்பாற்றியது.
- தனது தீவிர பக்தையான பாஜாபாயின் கற்பை காப்பாற்றியது
- வியாழக்கிழமை மதியம், பாத்ரபத மாதம், சுத்த ரிஷி பஞ்சமி தினத்தில் 1910 ஆம் ஆண்டு அவருடைய கடைசி மூச்சி இழுத்து அவர் கூறிய வார்த்தைகள் "ஜெய் கஜானன்" என்பதாகும். பரபிரம்மத்துடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டார்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593



# தத்த நாமஜபம் ஸ்ரீ குருதேவ தத்த

காக்கும் மற்றும் அழிக்கும் நாமஜபம்

தெய்வங்களின் நாமஜபங்களை செய்வதே கலியுகத்தில் மிகவும் சுலபமான வழியாகும். தெய்வங் களுக்கு 'காக்கும் ரூபம்', 'அழிக்கும் ரூபம்'என இரு ரூபங்கள் உள்ளன. பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கும் ரூபமே 'காக்கும் ரூபமாகும்' மற்றும் அசுரர்களை அழிக்கும் ரூபமே தெய்வத்தின் 'அழிக்கும் ரூபமாகும்'. இதிலிருந்து நம் கவனத்திற்கு வருவது என்னவென்றால், தெய்வத்தின் காக்கும் ரூபத்துடன் சம்பந்தப்பட்ட நாமஜபமே 'காக்கும்' நாமஜபமாகும் மற்றும் தெய்வத்தின் அழிக்கும் ரூபத்துடன் சம்பந்தப்பட்ட நாமஜபமே அதன் 'அழிக்கும்' நாமஜபமாகும்.

தெய்வத்தின் 'காக்கும்' நாமஜபத்தின் மகத்துவம்

தெய்வத்தின் காக்கும் நாமஜபத்தை செய்வதால் சைதன்யம், ஆனந்தம் மற்றும் சாந்தி ஆகிய அனுபூதிகள் கிடைக்கின்றன மற்றும் தெய்வத்திடம் ஸாத்வீகமான ஆன்மீக உணர்வும் நிர்மாணமாகிறது. தீய சக்திகளின் கஷ்டங்களிலிருந்து பாதுகாப்பு பெற தெய்வத்தின் காக்கும் ரூபத்தின் நாமஜபம் அவசிய மாகும்.

நாமஜபத்தின் மகத்துவம்

அழிக்கும் நாமஜபத்தை செய்யும்போது தெய்வத்திட மிருந்து வெளிப்படும் சக்தி மற்றும் சைதன்யத்தை க்ரஹிக்க முடிகிறது. அத்துடன் சூட்சுமத்தில் தீய சக்திகளை விரட்டி அடிக்க தெய்வத்தின் அழிக்கும் ரூபத்தின் நாமஜபம் அவசியமாகும்.

ஸ்ரீ தத்த குருவின் நாமஜபத்தை எவ்வாறு செய்ய வேண்டும்?

நாமஜபத்தின் மூலம் தெய்வ தத்துவத்தின் அதிகபட்ச பலனைப் பெற அந்தந்த நாமஜபத்தின் உச்சாரணம் சரியானபடி இருத்தல் அவசியமாகிறது. அதற்கு 'ஸ்ரீ குருதேவ தத்த' என்ற நாமஜபத்தை எவ்வாறு செய்வது என்பதைத் தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

'ஸ்ரீ குருதேவ தத்த' என்ற காக்கும் நாமஜபத்தை செய்யும்போது ஸ்ரீ தத்த குருவின் ரூபத்தை மனக்கண் முன் கொண்டு வர வேண்டும் மற்றும் நம்முடைய மூதாதையர்களால் ஏற்படும் கஷ்டங்களிலிருந்து நம்மை ரக்ஷிக்க அவர் ஓடி வருகிறார் என்ற ஆன்மீக உணர்வைக் கொண்டு நாமஜபத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் ஆன்மீக உணர்வு பூர்வமாக உச்சரிக்கவும்.

இதற்கு மாறாக அழிக்கும் நாமஜபத்தை செய்யும் போது 'ஸ்ரீ குருதேவ தத்த' என்பதிலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் அழிக்கும் நிலையில் உச்சரிக்கவும். அப்பொழுது தெய்வத்தின் நாமத்தில், அதாவது 'தத்த' என்ற வார்த்தையின் ஆரம்பத்தில் வரும் 'த' என்ற அக்ஷரத்தில் அதிக அழுத்தம் அளிக்கவும்.

அவரவர் இயல்பிற்கேற்ப காக்கும் அல்லது அழிக்கும் சக்தி நாமஜபத்தை செய்வது சிறந்தது

அவரவர் இயல்பிற்கேற்ப காக்கும் அல்லது அழிக்கும் நாமஜபத்தை செய்வதால் அவரவருக்கு அந்த தெய்வ தத்துவத்தின் பயன் அதிகம் கிடைக்கிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள காக்கும் மற்றும் அழிக் கும் நாமஜபத்தை சிறிது நேரம் செய்து பார்க்கவும். எந்த நாமஜபத்தில் மனம் அதிகம் லயிக்கிறதோ அதை செய்யவும். ஸாதனை செய்யாத எவரும் காக்கும் மற்றும் அழிக்கும் சக்தி நாமஜபத்தை செய்து பார்த்து எது அவர்களுக்குப் பிடிக்கிறதோ அதை தொடர்ந்து செய்து வரலாம்.

காலத்திற்கேற்றபடி காக்கும் மற்றும் அழிக்கும் நாமஜபத்தின் மகத்துவம்

எந்த விஷயத்தையும் காலத்திற்கேற்றபடி செய்யும் போது அதிக பயன் ஏற்படுகிறது. காலத்திற்கேற்றபடி இன்று தெய்வங்களின் காக்கும் மற்றும் அழிக்கும் தத்துவம் எம்முறையில் நாமஜபம் செய்தால் அதிக பலன் கிடைக்கும் என்பது பயிலப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு பராத்பர குரு டாக்டர் ஜெயந்த் பாலாஜி ஆடவலே அவர்களின் வழிகாட்டுதலின்படி பல பிரயோகங்கள் செய்யப்பட்டன. அதிலிருந்து நாமஜபம் தயார் செய்யப்பட்டுள்ளது. இது போன்று நாமஜபம் செய்வதன் மூலம் காலத்திற்கு அவசியமான ஸ்ரீ தத்த குருவின் காக்கும் மற்றும் அழிக்கும் தத்துவம், அவரவரின் ஆன்மீக உணர்வுக்கேற்ப கிடைப்பது சுலபமாக இருக்கும்.

சமூகத்திலுள்ள 90 சதவிகித மனிதர்கள் ஆன்மீக உணர்வுபூர்வமாக நாமஜபம் செய்வதில் விருப்பம் உள்ளவர்கள். இருந்தாலும் மீதியுள்ள அழிக்கும் சக்தி நாமஜபத்தில் விருப்பம் கொண்ட 10 சதவிகித மக்களும் பயனடைய வேண்டும் என்பதற்காக இருவகை நாமஜபங்களின் ஒலிநாடாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நாமஜபம் பற்றிய விஷயங்களை உங்களின் உறவினர்கள், நண்பர்கள், நெருங்கியவர்கள் ஆகியோரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்களும் இதன் மூலம் பயனடையட்டும்.

'ஸனாதனின் சைதன்யவாணி; என்ற மொபைல் ஆப்பிலும் இந்த நாமஜபங்கள் உள்ளன.

தீய சக்திகள் : சூழலில் நல்ல மற்றும் தீய சக்திகள் செயல்பாட்டில் உள்ளன. நல்ல சக்திகள் நல்ல காரியங்களுக்காக மக்களுக்கு உதவுகின்றன, அதேபோல் தீய சக்திகள் கஷ்டங்களைத் தருகின்றன. புராதன காலத்தில் ரிஷிமுனிவர்களின் யாகங்களில் பல ராக்ஷசர்கள் தடங்கல்களை ஏற்படுத்தினர் என்ற விஷயம் நம் புராணங்களில் காணக் கிடைக்கின்றன. அதர்வ வேதத்தில் பல இடங்களில் தீய சக்திகள், உதா ரணத்திற்கு, அசுரர், ராக்ஷசர்கள், பிசாசுகள் அவற்றுடன் கரணி, பானாமதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மந்திரங்கள் தரப்பட்டுள்ளன. தீய சக்திகளின் கஷ்டங்களிலிருந்து விடுபட பல்வேறு ஆன்மீக உபாயங்களையும் வேதம் போன்ற தர்மகிரந்தங்கள் கூறியுள்ளன.

சூட்சுமம்: மனிதனின் ஸ்தூல சரீரம் என்பது நேரிடையாக தெரியும் கண், மூக்கு, காது, நாக்கு, தோல் ஆகிய பஞ்ச ஞானேந்த்ரியங்கள் ஆகும். இந்த பஞ்ச ஞானேந்த்ரியங்கள், மனம், புத்தி ஆகியவற் றிற்கு அப்பாற்பட்டதே சூட்சுமம் ஆகும். ஆன்மீக முன்னேற்றம் அடையப் பெற்ற சிலருக்கு இந்த சூட்சும அதிர்வலைகளை உணர முடியும். இந்த சூட்சும ஞான விஷயம் பற்றி பல தர்மகிரந்தங்களில் குறிப்புகள் வருகின்றன. இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனுபூதிகள், 'ஆன்மீக உணர்வு உள்ள இடத் தில் ஆண்டவன்' என்ற உத்திக்கேற்ப கிடைத்த அனுபூதிகளாகும். இவை எல்லோருக்கும் கிடைக்கும் என்பது அவசியமில்லை.



இந்த வருடம் மார்கழி14, (டிசம்பர் 29ம்) தேதி தத்த ஜெயந்தி வருகிறது

www.hindujagruti.org

தொடர்பு: 09380949626

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி

மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையானவை காற்று, நீர், உணவு, உடை இருப்பிடம் என்பது அனைவருக்கும் தெரியும். நாம், பசியின் காரணமாக சோர்ந்துபோய் உள்ள ஒருவனிடம் சென்று 'என்ன வேண்டும் என்று கேட்டால், அவன் பசியைப் போக்கும் உணவுதான் வேண்டும் என்று அப்போது கேட்பான்.

அவனிடம் அப்போது விலை உயர்ந்த தங்கம், வைரம் போன்றவற்றை கொடுத்தாலும், அவன் விரும்பமாட்டான். மனிதன் பொதுவாக தனக்குத் தேவைப்படும் அத்தியாவசியமான பொருள்களை மட்டும் தேடிக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக மாணவனுக்கு எழுதுவதற்குத் தேவையானது ஒரு பேனா, பென்சில் போது மானது. தேவைக்குமேல் பேனாவோ பென்சிலோ வைத்துக்கொள்வது ஆடம்பரம் என்று அவன் கருத வேண்டும். இப்போது பள்ளியில் படிக்கும் மாணவர்களின் ஜாமற்றிப் பாக்சை திறந்து பார்த்தால் விதவிதமான பேனாக்கள் பென்சில்கள் என வைத்திருக்கிறான்.

மனிதர்கள் தேவைக்கு அதிகமாக எந்தப் பொருள் வைத்துக் கொண்டாலும் திருடனும் அவனும் ஒன்றுதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, உடுத்த ஆடை, குடியிருப்பதற்கு வீடு. இதுதான் மனிதர்கள் வாழும் எளிமையான வாழ்க்கை ஆகும். உயர்ந்த சிந்தனை எளிமையான வாழ்க்கை என்பதை நம் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இதனை ஆங்கிலத்தில் simple living high thinking என்று கூறுவார்கள். இப்படி மனிதன் எளிமையாக வாழ்ந்தால் அவன் வாழ்நாள் முழுதும் மன அமைதியுடன் வாழ்வான். இதனை வலியுறுத்திப் போதிப்பதுதான் ஆன்மிகம் காட்டும் அமைதிப்பாதையாகும்.

ஆன்மீகம் காட்டும் வழிமுறைகளைநன்கு அறிந்துகொண்டு, அதன்படி மனிதன் வாழும்போது, செயல்படும்போது, அவன் விரும்பும் தேடும் மனஅமைதிக்கான வழிகள் விரைவில் கிடைக்கும். மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் வாழும் முறையில் உள்ள வேறுபாட்டினை நினைத்துப் பாருங்கள். எடுத்துக்காட்டாக ஒரு பறவை தான் வசிப்பதற்கு மரத்தில் ஒரு கூடு மட்டும்தான் கட்டிக்கொள்ளும். தனது குஞ்சு பெரிதானால் அது வசிப்பதற்கு வேண்டுமே என்று எண்ணிகொண்டு மரத்தில் மற்றொரு கூடு கட்டுவதில்லை. காற்று மழையினால் தான் கட்டியிருக்கும் 'இந்தக் கூடு அழிந்து விடும்' என்று எதிர்பார்த்து மற்றொரு மரத்தில் வசதியான வேறு ஒரு கூடு எதுவும் கட்டுவதில்லை. இதில் பறவையின் செயலையும் மனிதர்களின் செயலையும் சற்று ஒப்பிட்டு பாருங்கள். மனிதனுக்கு பணம் மட்டும் இருந்தால், அவன் வீடு கட்டுவதற்கு இடம் இல்லையென்றால் கடல் நடுவேகூட வீடு கட்டிகொள்வான்.

மனிதர்கள் உடுத்தும் ஆடைகள் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். நமது முந்தைய தலைமுறைகள் பெரும்பாலும் எளிமையான ஆடைகளை அணிந்து, அதில் அவர்கள் திருப்தி அடைந்தார்கள். அவர்கள் மானம் காப்பதற்குத்தான் ஆடைகள் என்று கருதி எளிமையான ஆடைகளை அணிந்து திருப்தியடைந்தார்கள். அவர்கள் அன்று தாங்கள் அணியும் ஆடைகளுக்கு பெரும்பாலும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் தற்போது விதவிதமான ஆடம்பரமான ஆடைகளை அணிந்துகொண்டு, அதன் மூலம் தங்கள் நிலையை மக்கள் சமூகத்தில் உயர்த்திக் காட்டுவதற்கு தொடங்கி விட்டார்கள். மனிதர்கள் தன்னோட மானம் காப்பதற்கு மட்டுமே ஆடைகள் அணியும்நிலை என்பது மாறி, தற்போது சமூகத்தில் உயர்நிலையைக் காட்டுவதற்கு மக்களில் பலர் ஆடம்பரமான ஆடைகளை அணியத்தொடங்கி விட்டார்கள். சிலர் மற்றவர்கள்போல் விதவிதமான ஆடைகள் வாங்கமுடியவில்லையே என்று மனதளவில் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். மனிதன் இப்படி மனதளவில் ஏதோ ஒரு காரணத்தினால் கவலைப்பட ஆரம்பித்தால் அமைதி என்பது அவனிடமிருந்து விடை பெற்று விடும்.

8

மனிதர்கள் தங்களது ஆடைகளை குறிப்பாக பெண்கள் துணிக்கடைகளில் சென்று புடவைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வீணாக அதிகநேரம் எடுத்துக்கொள்கிறார்கள். விலை உயர்ந்த ஆடம்பரமான உடைகள் அணிந்து, தங்களை சமூகத்தில் உயர்ந்தவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கு ஆண்களும் பெண்களும் விரும்புகிறார்கள். அவ்வாறு விலைஉயர்ந்த ஆடைகளை அணிந்து பழக்கப்படுத்தியதற்கு பிறகு அவர்களால் மீண்டும் எளிமையான ஆடைகளை அணிவதற்கு, மாறுவதற்கு, அவர்கள் மனம் எளிதில் இடம் கொடுப்பதில்லை. அவர்களின் தன்மானமும் இடம் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட மனித மனங்களை செம்மைப்படுத்தி வாழ்க்கையை எளிமையானமுறைக்கு மாற்றுவதற்கும் அதற்கான மனஉறுதி, மனஅமைதி பெறுவதற்கும் ஆன்மிகம் வழிகாட்டுகிறது.

மனிதர்கள் தாங்கள் உண்ணும் உணவைப் பற்றி சற்று சிந்தித்து பாருங்கள். அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்கள் எளிமையான ஆரோக்கியமான உணவுகளை உண்டு களித்தார்கள். உடலின் உழைப்புக்கேற்ற உணவினை சாப்பிட்டுக்கொண்டு ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ்ந்தார்கள். ஆனால் இப்போதெல்லாம் விதவிதமான வண்ண வண்ண உணவுகள், விரைவு உணவுகள் (fast food) விதவிதமான குளிர்பானங்கள் என்று உடல் ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடிய உணவுமுறைகளை மேற்கொள்கிறார்கள். இப்போது பெரும்பாலான மனிதர்கள் பசிக்காக உணவை உண்ணாமல், ருசிக்காக உண்ண ஆரம்பித்து விட்டார்கள். மக்கள் பசிக்காக உணவினை உண்ணும் போது உணவினை வீணாக்காமல் உண்டு மகிழ்ந்தார்கள். ஆனால் மக்கள் உண வினை ருசிக் காக தாங்கள் உண்ணும்போதுஉணவினை வீணாக்குவதோடு, வீணாக்கு





www.aanmeegamalar.com
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

வது பற்றி எந்தவிதக் கவலையும்கொள்வதில்லை. நாம் உண்ணும் அரிசிசோறின் ஒவ்வொரு அரிசியிலும் விவசாயிகளின் கடின உழைப்பினால் கிடைக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் அவ்வாறு மனிதர்கள் உணர்ந்து கொண்டால் யாரும் தாங்கள் உண்ணும் உணவினை சாப்பிடாமல் வீணாக்கமாட்டார்கள்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஆரோக்கியஉணவுகளைஉரிய நேரங்களில் உண்ணாமல், நினைத்த போதெல்லாம் ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதால் இப்போதுமனிதர்கள் விதவிதமான நோய்களில் வீழ்ந்து துன்பப்படுகிறார்கள். மனிதனுக்கு வருகின்ற பலவகையான நோய்களை கண்டு 'என்ன நோய் என்று டாக்டர்களுக்கு சில நேரங்களில் அறிந்து கொள்வதற்குக்கூட முடிவதில்லை. டாக்டர்கள் பலவிதமான மருந்துமாத்திரைகளை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குணப்படுத்துவதற்காக கொடுத்துப் பார்க்கிறார்கள். இறுதியில் நோயின் தன்மையை மருத்துவர்களால் அறிந்து கொள்வதற்கு முடியவில்லையெனில் 'அலர்ஜி' அதாவது ஒவ்வாமை என்று அந்த நோய்க்கு முத்திரையை மருத்துவர்கள் குத்தி விடுகிறார்கள்.

மனிதன் தன்னோட உடல்நிலையானது பாதிக்கப்படும்போதுதான், அவன் தன்னோட உடநிலையைப் பற்றி நினைத்து கவலைப்படுவதன் மூலம் அவன் தன்னுடைய மனஅமைதியையும் இழக்கிறான் என்பதையும் உணர்ந்து கொள்வதில்லை. ஆரோக்கியமான வாழ்வுக்குத் தேவையான உணவுகள், உணவுமுறைகள் மருத்துவ முறைகள் என்று சித்தர்கள் ஞானிகள் தங்கள் அனுபவத்தின் மூலம் நமக்கு ஆன்மிக வழியில் பாடல்கள் மூலம் விளக்கி போதித்துள்ளார்கள். 'காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய்... மண்டலம் தின்றால் கோலை ஊன்றி குறுகி நடப்பவன் கோலை வீசி குலுக்கி நடப்பானே...' என்று சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது..

பாவம், புண்ணியம் என்பவைகள் நமது கண்ணுக்குத் தெரியாத பலன்கள் ஆகும். புண்ணியம் என்றால் துன்பமில்லாத ஆனந்தமயமான வாழ்க்கை என்றும், பாவம் என்றால் நீங்காத துன்பம் துயரங்கள் நிறைந்தது என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். தங்கள் கண்களுக்கும் கருத்துக்கும் அறிந்தும் அறியாமல் புண்ணியமான காரியங்களை சிலர் இடைவிடாமல் செய்துகொண்டும், அதன்மூலம் வரக்கூடிய புண்ணியத்தின் பலன்களை வாழ்க்கையில் அடைந்து மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். இதனைத்தான் நாம் சிலநேரங்களில் 'அதிர்ஷ்டம்' அல்லது 'குட்லக்' என்று கூறிக்கொள்கிறோம்.

புண்ணியத்தைத் தேடுதல் என்பது தங்கள் அடிப்படைத் தேவைகளுடன், வாழ்க்கையில் இயன்றவரையில் தானதர்மங்கள் செய்தல் போன்ற செயல்களில் மனம் ஈடுபடவேண்டும். எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருத்தல் வேண்டும் என்பதை வடலூர் வள்ளல்பெருமான் சுருக்கமாக ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.. உலகில் சாதி மத வேறுபாடின்றி ஒற்றுமையுடன் ஆன்மீக வாழ்வை ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும் என்று இராமகிருஷ்ணபரமஹம்சர் போதித்ததோடு மட்டுமல்லாமல் அவர் ஆன்மீக வழியில் அதன்படி வாழ்ந்தும் காட்டியுள்ளார்

நாம் ஏழை எளியவர்களுக்கு முடிந்தளவு உதவி செய்யவேண்டும் என்று சாஸ்திரங்கள் வலியுறுத்திக் கூறியுள்ளது. 'எவனுடைய உள்ளம் ஏழை மக்களுக்காக கண்ணீர் வடிக்கின்றதோ அவனையே நான் மகாத்மா என்பேன், மற்றவர்கள் எல்லாம் துராத்மாவே என்பேன்' என்று சுவாமி விவேகானந்தர் கூறி, ஏழை எளிய மக்களுக்கு இயன்றவரை உதவி செய்ய வேண்டும் என்று தன்னோட ஆன்மீக உரையில் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தியுள்ளார்.

பிறர்மீது கோபப்பட்டு அவர்கள் மனம் புண்படும்படி பேசக்கூடாது என்றும், கோபத்தின் தன்மையால் சிந்திக்கும் திறனையே மனிதன் இழந்து விடுகிறான் என்று ஆன்மிகம் கூறுகிறது. பொறுத்தார் பூமி ஆள்வார் என்று பொறுமையின் அவசியத்தை வலியுறுத்தி பெரியவர்கள் கூறியுள்ளனர். கோபம் மனிதனுடையை மனஅமைதி கெடுவதற்கு முக்கிய காரணமாகிறது. மனிதனுடைய கோபத்தினால் அவனுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்பது பற்றி சிந்தித்து பார்க்கலாம்.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308



# புல் சாப்பிட்ட கல் நந்தி




கஞ்சனூரில் தேவசர்மா என்ற அந்தணன் இருந்தான். அவன் ஒரு முறை வைக்கோல் கட்டுகளை, அறியாமலும்.. தெரியாமலும் ஒரு பசுங்கன்றின் மீது போட்டு விட, அந்தக் கன்று துடிதுடித்து இறந்து போனது. அந்தக் கன்று, சிறந்த பக்திமானான ஹரதத்தர் என்பவருக்குச் சொந்தமானது.

பசுங்கன்றைக் கொன்றதால், அவனை மகாபாவி என்று பலரும் ஒதுக்கினார்கள்.இந்த நிலையில் நடந்த விபரீதத்தை எடுத்துக் கூறுவதற்காக, பசுங்கன்றின் உரிமையாளரான ஹரதத்தரின் வீட்டிற்குச் சென்றான், தேவசர்மா. அங்கு வீட்டுக்குள் நுழைந்தபோது, வாசல்படி தலையில் இடித்து 'சிவ.. சிவா' என்று கத்தினான்.

குரல் கேட்டு வெளியே வந்த ஹரதத்தர், தேவசர்மா பற்றியும், அவன் வந்த நோக்கம் பற்றியும் அறிந்து கொண்டார். பின்னர், 'நீ சிவ என்று சொன்னதுமே, பசுவைக் கொன்ற உன்னுடைய பாவம் நீங்கிவிட்டது. இரண்டாவதாக சிவா என்று கூறியதற்காக, உனக்கு கயிலாய பதவியும் கிடைக்கப் போகிறது' என்று தேவசர்மாவுக்கு ஆறுதல் கூறினார்.

ஆனாலும் கூட ஊர்மக்கள் பலரும் தேவசர்மாவை மனதார மன்னிக்கவில்லை. ஊரைவிட்டு விலக்கியே வைத்திருந்தார்கள்.

ஒரு நாள் ஹரதத்தர், கஞ்சனூரில் உள்ள அந்தணர்கள் அனைவரையும், அங்குள்ள ஈசன் எழுதருளியுள்ள அக்னீஸ்வரர் ஆலயத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அதன்படியே ஊர்மக்கள் அனைவரும் ஆலயத்தில் கூடியிருந்தனர்.

அப்போது ஹரதத்தர், தேவசர்மாவிடம் ஒரு புல் கட்டைக் கொடுத்து, 'நீ சிவ.. சிவா என்று சொன்னதுமே உன்னுடைய பசுவைக் கொன்ற பாவம் நீங்கிவிட்டதாக நான் கூறினேன். ஆனால் அதை ஊர் மக்கள் யாரும் நம்பவில்லை. எனவே நீ இங்குள்ள கல் நந்திக்கு இந்தப் புல்லைக் கொடு. அது அதை சாப்பிட்டால் உன்னுடைய பாவம் நீங்கிவிட்டதாக இங்கிருப்பவர்கள் உணர்ந்து கொள்வார்கள்' என்றார்.

அதைக் கேட்டு கூடியிருந்த மக்கள் அனைவரும் எள்ளி நகையாடினர். 'கல் நந்தி எப்படி புல் சாப்பிடும்' என்பதால் வந்த நகைப்பு அது.

ஆனால் ஹரதத்தரோ இறைவன் மீதான நம்பிக்கையில், 'இறைவா! உன்னுடைய நாமத்தை ஒரு முறை சொன்னாலே பசுங்கன்றை கொன்ற பாவம் நீங்கிவிடும் என்று நான் சொன்னது உண்மையானால், கல் நந்தியை புல் சாப்பிட்டு மெய்ப்பிக்கச் செய்ய வேண்டும்' என்று மனமுருக வேண்டினார்.

என்ன ஆச்சரியம்.. தேவசர்மா கொடுத்த புல்லை அந்த கல் நந்தி சாப்பிட்டது. அங்கிருந்த அனைவரும் சிவ நாமத்தின் உயர்வையும், பக்திக்கு கிடைக்கும் பலனையும் கண்டு இறைவனை மனதார வழிபட்டனர்.

இந்த கல் நந்தி, கஞ்சனூர் அக்னீஸ்வரர் ஆலயத்தில் இருக்கிறது. திருவாரூர் கும்பகோணம் சாலையில் 45 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது கஞ்சனூர்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020

# ஆன்மிகமலர்.காம்

## இணையதளத்தின் சார்பில் வெளிவரும்

## ஆன்மிகமலர் மெயில்புக்

## வாசகர்களுக்காக துவக்கப்பட்ட

## YouTube சேனலை

ஆன்மிகமலர்

**LIKE**
**COMMENT**
**SUBSCRIBE**
**SHARE**
**செய்யுங்கள்**




## தொடர்ந்து நமது YouTube சேனலுக்கு ஆதரவு தாருங்கள்